1399

Rs. 3-.-

Registered No. M. 878

5-MAR 1924

பூர்ணசந்திரோதயம்

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization

தொகுதி 7 } 1917-௵ ஜனவரி௴ நள௵ தை௴ { பகுதி 9

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்.

(CONTENTS.)

பக்கம்

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி.ஏ. 323 & 356
Current events—R. Rangaswamy Iyer. B. A.

2. யுத்தமும் சீர்திருத்தமும்—கே. யஸ். ராமசந்திர ஐயர் 331
War and Reform—K. S. Ramachandrier

3. இல்லற தருமம்—தி. யம். முகையதீன். 337
Dharma of a House-holder—T. M. Mohideen.

4. பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்) வி. வெங்குசாமி ஐயர் 344
Elements of Theosophy—V. Vengusamy Iyer

5. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. 347
Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.

6. கீதாவாக்கியங்கள்—ஆர். யஸ். நாராயணசாமி ஐயர் 354
Sayings from the Bhagavad-Gita R. S. Narayanasamy Iyer

7. பத்திரிக்கைகள் வரவு (Review of Journals) 359

8. சமாசாரம்—News 360

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாராதது. பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ கன்கார்டியா ஹாலில், ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு. தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூலமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.
பிரஹ்மக்ஞான மந்திரம்,
மதுரை

13

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 7 | 1917-௵ ஜனவரி௴ நள௵ தை௴ | பகுதி 9

தற்கால நிலைமை.

"𑌮𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌰𑍍𑌗𑌶𑍀𑌰𑍍𑌷𑍋𑌽𑌹𑌮𑍍" என்று பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருளிச் செய்திருக்கிறார். மாசங்களிற் சிறந்தது மார்கழியென்பதற்கு காரணம் என்ன என்று யோசிக்குமளவில் பல காரணங்கள் புத்திமான்களுக்குத் தோன்றலாம். ஆனால் தற்காலத்தில் இந்தியாவில் நடக்கும் முயற்சிகளை யுற்றுநோக்குங்கால் மேற்கூறியபடி மார்கழி மாதத்திற்குச் சிறப்பு வாய்த்தற்குக் காரணமாக அம்மாதத்தில் நடை பெறும் உற்சவாதிகளைக் கூறலாம். ஸ்ரீரங்கத்தில் கொண்டாடும் பரமபத ஏகாதசி உற்சவமும் சிதம்பரத்தில் கொண்டாடப்படும் ஆருத்திரா தர்சனமும் விசேஷமானவைகளே. இக்குளிர் நாளில் தகுந்த வசதிகளில்லாமல், ரயில் வண்டிகளில் ஆடு மாடுகள்போல அடைக்கப்பட்டு அதனால் ஏற்படும் கஷ்டங்களையும் கருதாமல், சென்றவிடங்களிலும் பல மாதிரியான அசௌகரியங்களையும் சகித்துக்கொண்டு எத்தனையோ ஆடவர்களும் ஸ்திரீகளும் இந்த திவ்ய க்ஷேத்திரங்களுக்குச் செல்லுகிறார்கள். இவர்

களுடைய பக்தியும் சிரத்தையும் மெச்சத்தக்கதே. இம்மாதிரியே வட இந்தியாவிலும் பற்பல க்ஷேத்திரங்களுக்கு ஜனங்கள் யாத்திரை போகிறார்கள் என்பதும் வாஸ்தவம். ஆனால் தற்காலத்தில் அத்தகைய க்ஷேத்திரங்களுக்குச் செல்லும் பக்தர்களைத்தவிர வேறு பல பக்தர்களிருக்கிறார்கள். அவர்கள் மாதிரு தேசபக்த சிகாமணிகள். இவர்களும் பணச்செலவைச், சிறிதும் கருதாமல் இந்தியாவின் சகல பாகங்களினின்றும் கூட்டம் கூட்டமாக ஒரு க்ஷேத்திரத்திற்கு புறப்பட்டுப்போனார்கள். ஹிந்துக்களும், மகம்மதியர்களும், பார்ஸிகளும், பௌத்தர்களும்—இந்தியர்களனைவரும் அன்னிய பூமியில் பிறந்து இந்தியாவை தாய் பூமியாகக் கொண்டவர்களும், ஐக்கியமாகாணங்களிலுள்ள லக்ஷ்மணபுரிக்கு வந்து சேர்ந்தார்கள்.

*
* *

நமது பிரஹ்மக்ஞான சபையின் 41-வது வருஷோற்சவம் அவ்விடத்தில் கொண்டாடப்பெற்றது. இந்தியன் நாஷனல் காங்கிரஸ் என்ற மஹா சபையவ்விடத்தில் கூடிற்று. மகம்மதியர்களுடைய சர்வ இந்திய மஸ்லீம் லீக் என்ற மஹா சபையும் காயஸ்த கான்பெரன்ஸும், ஆர்ய சமாஜத்தார்களின் வருஷோத்ஸவமும் ஜைனர்களின் சங்கமும், பிரஹ்ம சமாஜத்தாரின் தீயிஸ்டிக் கான்பெரன்ஸும் அந்நகரிலே கூடின. மேலும் ஆசார சீர்திருத்த கான்பெரென்ஸும் கைத்தொழில் கான்பரென்ஸும் அவ்வாறே கூடின. சர்வ இந்தியா மதுநிவாரண சமாஜமும், சர்வ இந்தியா ஹிந்து கான்பெரென்ஸும், சர்வ இந்தியா ஹோம் ரூல் லீக் கான்பெரன்ஸும் அந்த பட்டணத்திலேயே கூடின. டிசம்பர்மீ 25உ முதல் 31உ வரை அந்த நகரத்தில் கோலாஹலமாயும் கொண்டாட்டமாயும் இருந்தது. உள்ளூரார் விருந்தாளிகளை வரவேற்கவும், விருந்தாளிகள் உள்ளூராரோடு அளவளாவி உறவாடவும் கண்டோர் மனமெல்லாம் பூரித்தது. ஒவ்வொருவரும் தங்களுடைய பிரத்தியேக வகுப்பையும், வர்ணத்

தையும், ஜாதியையும் மதத்தையும் மறந்து இந்தியன் என்ற உணர்ச்சியை மட்டுமே கொண்டிருந்தார்கள். மிதவாதி, அமிதவாதி, ஹிந்து, மகம்மதியன் என்ற பேதங்களின்றி எல்லோரும் ஒற்றுமையடைந்து சகோதர பாவமுற்றிருந்தார்கள். மகம்மதியர் ஸமாஜத்தில் ஹிந்துக்கள் போய் பிரசங்கங்கள் செய்தார்கள். எல்லாவற்றையும் நோக்குமிடத்து பகவத் சங்கல்பப் பிரகாரம் இந்தியாவே ஒற்றுமைப்பட்டு இந்திய தேசாபிமானிகளான ஸ்ரீ கோகலே தாதாபாய் முதலியவர்களுடைய எண்ணம் பூர்த்தி பெற்றதாகத் தோன்றியது.

*
* *

கூடிய சங்கங்களிலெல்லாம் காலத்திலும் முக்கியத்திலும் முதன்மையானது நமது பிரஹ்மக்ஞான கான்பெரென்ஸ் எனலாம். என் எனில் தற்போது கூடிய கூட்டமானது 41-வது வருஷக் கூட்டம். மற்ற சங்கங்களில் காலத்தில் முந்தியதாகிய இந்தியன் நாஷனல் காங்கிரஸ்கூட 31 வயதுதான் கொண்டது. மேலும் சகல ஜீவர்களும் ஈசுவரனுடைய அம்சங்கள் என்றும், ஆகையால் சகோதரர்கள் என்றும், அச்சகோதர பாவத்தை சகலரும் உணர்ந்து நடக்கவேண்டும் என்றும் கம்பீரமாய் கோஷித்துக் கொண்டிருப்பது நமது பிரஹ்மக்ஞான சபையல்லவா? அது பற்றியே இந்தியர்கள் எல்லோரும் ஐகமத்தியத்தை யடைவதும் இந்தியாவானது தன்னுடைய ஸ்தானத்தை யடையவேண்டுமென்பதும், பிற்கூறிய காங்கிரஸ்ஸின் நோக்கமாயிருக்கின்றது. ஒரே ஈசுவர சைதன்யமானது பற்பல சரீரங்களில் புகுந்து பற்பல குணாதிசயங்களுடன் பிரகாசிப்பது போலவும், ஒரே மின்சார சத்தியானது, மின்சார விளக்கில் ஒளியாகவும், மணியில் நாதமாகவும், அடுப்பில் உஷ்ணமாகவும், மோடார் வண்டியில் ஓடும் விசையாகவும் விளங்குவது போலவும் நமது ஜன்மபூமியின் கிளர்ச்சியானது மேற்கூறிய பற்பல ஸமாஜங்களில் பலவேறு முயற்சிகளாய் பரிணமித்து நிற்கின்றது.

*
* *

டிசம்பர்மீ 25, 26, 27வ களில் முற்பகலில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டம்மை யவர்கள் மூன்று பிரசங்கங்கள்

செய்தார்கள். முதல் நாளில் "பிரஷ்மக்ஞானியானவர் மதங்களின் பால் கொண்ட கடமை"யைப்பற்றியும், இரண்டாம் நாள் "ஜனசமூகத்தின் பால் கொண்ட கடமை"யைப் பற்றியும், மூன்றும் நாள் "தன் தேசஜனங்கள் பாலும் மனுஷ்ய வர்க்கத்தின் பாலும் கொண்ட கடமை" யைப் பற்றியும் உபந்யசித்தார்கள்.

***

"மேல் நாட்டில் முன் காலத்தில் கிறிஸ்து மத ஆசாரியர்களான "போப்பு"கள் குறுகிய மனத்தர்களாய் தங்கள் விவிலிய நூலுக்கு விரோதமாகத் தோன்றிய சர்ச்சைகளையே தலையெடுக்க விடாதவர்களாயிருந்தார்கள். பௌதிக சாஸ்திரிகள் ஏதாவது உண்மையென்று பிரேரேபித்தால் அது விவிலிய நூலுக்கு விரோதமாயிருக்கின்றதென்று அவர்களை சிறையிலடைத்து சொல்லொணுக்கொடும் துன்பங்களுக்குட்படுத்தி தீக்கிரையாக்கினர்கள். ஆகையால் தத்துவ சாஸ்திரிகளுக்கும் மதாசாரியர்களுக்கும் கொடிய விரோதமேற்பட்டது. ஆகையால் ஆதியில் தத்துவ ஆராய்ச்சி சாஸ்திரிகளே யில்லாதிருந்தது. பின்னுடி காலக் கிரமத்தில் கொஞ்சம் கொஞ்சமாக தத்துவஆராய்ச்சி அதிகரிக்க தத்வஆராய்ச்சிசாஸ்திரிகள் மதாசாரியர்களையும் கிறிஸ்து மதத்தையுமே வெறுத்தவர்களாய், நாஸ்திகர்களாய் விட்டார்கள். மதத்துக்கும் சாஸ்திரத்திற்கும் இருந்த விரோதத்தை மாற்றுவதற்காகவே பிரஷ்மக்ஞான சபை ஸ்தாபிக்கப்பட்டதென்னலாம். ஆனல் தற்போது இக்காரியம் கைகூடிவிட்டது. வித்தையானது பரவித்தையென்றும் அபர வித்தையென்றும் இருவகைப் பட்டது. ஜீவனும் ஈசுவரனும் ஒன்று, ஜீவன் ஈசுவரனே அறியக்கூடும்; என்றறிவிக்கும் வித்தையே பரவித்தை. இந்த தத்துவம் சகல தேசங்களுக்கும் பொதுவானது. மேனுட்டார் இந்த தத்வத்தை மறந்து விட்டார்கள். மறந்துபோன இத்தத்துவத்தை ஞாபகத்துக்கு கொண்டுவர வேண்டுவதும் பிரஷ்மக்ஞான சபையின் கடமையாம். புனர் ஜன்மம் என்பது உண்டு; ஒவ்வொரு கர்மத்துக்கும் பலன் உண்டு; கர்மத்தைச் செய்தவன் பலனை அநுபவித்துத் தீரவேண்டும்; என்ற உண்மை

களையும் மேனாட்டார் மறந்து போய்விட்டார்கள். இத்தத்துவங்களை அவர்களுக்கு போதிக்கவேண்டும். மேலும் எவ்வாறு பௌதிக சாஸ்திரமானது கட்புலனான விஷயங்களின் தத்துவத்தை ஆராய்ச்சி செய்கிறதோ, அம்மாதிரியாய் இந்திரியங்களுக்குத் தென்படாத சூக்ஷ்மலோகங்களின் விஷயங்களைப் போதிப்பது மதமாகும். இரண்டுக்கும் முரண் இல்லை. காலதேசங்களுக்குத் தக்கவாறு சில அம்சங்கள் வித்யாசமாய்த் தோன்றினும் மதங்களுக்குள் பரஸ்பரம் விரோதமில்லை ஆகையால் மதத்துவேஷம் ஏற்படுவது புத்தியீனத்தாலன்றி வேறில்லை. பௌதிக சாஸ்திரத்தில் ஜனங்களுக்கு தற்காலத்தில் கிடைத்திருக்கும் பயிற்சி கெடுதிக்கே காரணமாயிருக்கின்றது. ஏன் என்றால் அப்பயிற்சியைக்கொண்டு ஜனங்களை வதைசெய்ய உபயோகிக்கிறார்கள். ஆனால் இவ்வளவு கொடிய யுத்தத்திற்குப் பிறகு லோககுருவானவர் அவதரித்து லோகத்தை சீர் திருத்துவார் என்பது நிச்சயம். முற்காலத்திலும் இங்ஙனமே நிகழ்ந்திருக்கின்றது. ஆகையால் லோககுருவானவர் அவதரிக்கப்போகிறார் என்று பறைசாற்றுவதும் பிரஹ்மக்ஞானியின் கடமையாகும்.

***

“பிரஹ்மக்ஞான சபையங்கத்தான் ஒவ்வொருவனும் தான்பிறந்த மதத்தின் தத்துவத்தை நன்குணர்ந்து அம்மதத்தில் கூறியபடி ஸ்வாநுபவம் பெற முயல்கிறான். தன் மதத்திற்கும் பிறமதங்களுக்கும் உள்ள ஒற்றுமையை அறிந்து அவைகளையும் அபிமானிக்கிறான். பகவத்கீதையில் பகவான் சொன்னபடி எந்த கர்மமானது யக்ஞமாகச் செய்யப்படுகிறதோ அதன் பலனானது கர்த்தாவைக் கட்டுப்படுத்துகிறதில்லை. ஆகையால் யக்ஞமாக, அதாவது தனக்கு லாபத்தை யுத்தேசிக்காமல், கைங்கரியம் செய்தல் பிரஹ்மக்ஞானியின் கடமையாகும். கைம்மாறு கோராததும், லோக ஹிதத்தின் பொருட்டுச் செய்யப்பட்டதுமான கைங்கரியம்தான் உத்தம லோகங்களில் பயனுள்ளது. அவைகளையே பிரஹ்மக்ஞானி செய்யவேண்டும். தான் ஈசுவரனுடன்

ஒன்று என்றும் அறிந்து, தனக்கு என்ற ஆசையை வேருடன் அறுக்க முயல்வானாகில் லோகத்துக்கு எது ஹிதமோ அதைச் செய்ய முயல்கிறான். தனக்கென்று விரும்பாதவனுக்கு பகவானே அவன் லோகத்துக்கென்று விரும்புமவற்றை யெல்லாம் அருளுகிறார். நான் ஏராளமான பொருளைப் பல பொதுக்காரியங்களுக்கு கொடுக்க இயலுவது எங்ஙனம் என்று பலர் ஆச்சரியப்படுகிறார்கள். மேற்கூறியதை நோக்குங்கால் அதில் யாதொரு ஆச்சரியமும் இல்லை.

* * *

"பிரஹ்மஞானியானவன் ஜனசமூகத்துக்கு என்ன கைங்கரியம் செய்யவேண்டியது? கர்மம், புனர்ஜன்மம், சகோதர பாவம் என்ற மூன்று உண்மைகளையும் அறிந்து, அவ்வுண்மைகளைக் கொண்டும் ஜனசமூகத்தின் ஒழுங்கினத்தையுற்று நோக்கவேண்டும். தீண்டாச் சாதியாரை நாம் நடத்திவரும் முறை நியாயமாவென்றும், பாலியவயதிலேயே நமது சிறுவர் சிறுமிகளுக்கு கல்யாணம் முடிப்பது முறையாவென்றும், குற்றவாளிகளை இத்தேசத்தில நாம்சரியாய் சீர்திருத்துகிறோமா வென்றும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். முன் காலத்தில் இந்தியாவானது எவ்வாறு சிறப்புற்றிருந்ததோ அவ்வாறே வருங்காலத்திலும் பெருமையடையுமாறு நாம் நடக்கவேண்டும். மேலும் பிரஹ்மஞானம் பொருந்தியவன் ஸதா சோம்பேறியாய் ஸ்வப்நம்கண்டு கொண்டிருப்பவனல்ல. ஆனால் ஸதா லோக சம்ரக்ஷணத்திற்காகவும் பரோபகாரத்திற்காகவும் ஆயத்தனாக விருப்பவன் என்றும் உலகத்திற்கு கண் கூடாகக் காட்டவும் கடமைப்பட்டவன்.

* * *

"எந்த தேசத்தில் பூர்வ கர்மத்தின் காரணமாய் ஒரு பிரஹ்மஞான சபையின் அங்கத்தான் பிறந்திருக்கிறானோ அத்தேசத்திற்கு ஏற்ற கைங்கரியங்களையவன் செய்யக்கடவன். தேசத்துக்கு தக்கவாறு அவன் கடமைகளும் வேறுபடும். இந்தியாவில் இருப்பவன் முதன் முதலாக சகலஜனங்களுக்கும் கல்விபரவும்படி தன்னாலியன்ற உதவி செய்யக்கடவன்.

இந்தியாவானது தனக்கு ஏற்ற கௌரவமான ஸ்திதியை அடையுமாறு முயல்வது அவன் கடமையாகும். கல்வி விஷயத்தில் கவனிக்கவேண்டியது மூன்று. மதப் பயிற்சி அவசியம் கொடுக்கவேண்டும். மாதிரு தேச பக்தியையும் சிறுவர்களுக்கு கற்பித்தலவசியம். சரீரத்தை ஆரோக்கியமுள்ளதாகச் செய்வதவசியம். அதற்காக தேகாப்பியாசங்கள் செய்யும்படி சிறுவர் சிறுமிகளுக்குப்பழக்கி வைக்கவேண்டும்.

* * *

"ஒரு தேச ஜனங்களுக்கும் இதரதேச ஜனங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கவேண்டியது? தேசபக்தியும் தேசாபிமானமும் இருக்கவேண்டுமென்றால் இதர தேச வெறுப்பு வேண்டுமென்பதல்ல. எவ்வாறு ஜனங்கள் சகோதரர்களோ அவ்வாறு பல தேசஜனங்களும், சகோதரர்கள் தாம். ஒரு தேசத்துக்கும் மற்றொரு தேசத்துக்கும் வெறுப்பு ஏற்படும்படியான யாதொரு காரியத்தையும் பிரஹ்மக்ஞானி செய்யலாகாது; ஒருவன் தன் குடும்பத்திலுள்ள சகோதரர் முதலியவரை நேசிக்கவேண்டியதவசியம். ஆனால் மற்ற குடும்பத்தாரை வெறுக்காமல் அக்குடும்பங்களையும் நேசித்து ஒற்றுமையாய் ஒருதேசத்தில் வாழுகிறானல்லவா? அதே மாதிரி ஒரு தேசம் மற்ற தேசத்தை நேசித்து ஒற்றுமையாய் வாழ்தல் உலகத்திற்கு க்ஷேமத்தைத் தரத்தக்கது. ஒவ்வொரு பிரஹ்மக்ஞானியும் இவ்வாறு உலகம் நடத்தற்கு காரணமாயிருக்கவேண்டும்," என்று இவ்வாறு அம்மையவர்கள் பிரசங்கங்களில் எடுத்துக் கூறினார்கள்.

* * *

பம்பாயில் சில தேசாபிமானிகள் 'நாஷனல் காலேஜ்' ஸ்தாபிக்கவேண்டுமென்று உத்தேசித்து, அதற்காக 15 லக்ஷம் ரூபாய் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாய் பொருள் சேர்ந்துவிட்டதாம். அது காசியில் ஸ்தாபிக்கப் பெற்ற ஸெண்டிரல் ஹிந்து காலேஜைப் போலவே நம் மாதிரு பூமி பக்தர்களால் மாதிரு தேச பக்தியையும்,

மதபோதனையையும் இதரக் கல்லூரிகளைப் போல் மற்ற கல்விகளையும் கற்பிக்கவேண்டுமென்று உத்தேசமாம். ஆனல் உத்தேசக் கல்லூரியானது சகல மதஸ்தர்களுக்கும் அவர்களுடைய மதத்தைப் போதிக்குமாம். காசி காலேஜில்' தலைமை உபாத்தியாயரா யுழைத்துக் கியாதிபெற்ற ஜார்ஜு அருண்டேல் என்ற உத்தமர் பிரதமத்தில் தலைமை உபாத்தியாயராக இருக்கச் சம்மதித்திருக்கிருர். பம்பாயில் இவ் விஷயத்தில் உண்டாயிருக்கிற உற்சாகத்தை நோக்குங்கால் இக்கல்லூரியானது வெகு சீக்கிரத்தில் ஏற்படும் என்று தோன்றுகிறது.

* * *

சென்னையில் டிசம்பர் 27, 28உகளில் இந்திய கிறிஸ்தவர்கள் காங்கிரஸ் ஒன்று நடந்தது. அந்த காங்கிரஸ் அக்கிராசனபதி கனஸ்ரீ எம். எஸ். தாஸ் செய்த பிரசங்கம் மெச்சத்தக்கது. இந்தியாவின் பூர்வ விருத்தாந்தமானது மிகவும் கௌரவம் வாய்த்ததென்றும் தான் இந்தியன் என்கிறதைப் பெருமையாய் பாவிக்கிறதாயும், இதர மதஸ்தர்களுடன் இந்தியாவின் மேம்பாட்டுக்காக உழைக்க சித்தமாகயிருக்கிறதாயும் தெரிவித்தார். அதற்குப்பிறகு பஞ்சாபிலிருந்து வந்த டேவிட் என்ற ஒருவர் ஒரு வியாசம் படித்தார். அதில் இந்தியாவானது ஐகமத்தியமுள்ள தேசமாகுமுன் எல்லோரும் கிறிஸ்தவர்களாகவேண்டுமென்றும், கிறிஸ்தவர்கள் ஹிந்து நாமங்களை தரித்தலாகாதென்றும் இதைப் போல சில கருத்துக் களடங்கியிருந்தது. ஆனல் சபையோர் அக்கருத்துக்களோடு இணங்கவில்லை. ஆகையால் அவரைத் தவிர சபையோ ரனைவரும் அவ்வியாசத்தை அச்சிடத் தக்கதில்லையென்று ஏசோபித்து தீர்மானித்தார்கள். இந்த விஷயமும் காலத்திற்கு இயைந்து இருக்கின்றது.

* * *

சென்னையில் மற்றொரு பெரும் விசேஷம் நடந்தது. சென்னை மாணவர் கன்வென்ஷன் என்ற கூட்டம் ஒய். எம். ஐ. ஏ. கோகலே ஹாலில் டிசம்பர் 27, 28, 29உகளில்

(356-ம் பக்கம் பார்க்க)

யுத்தமும்—சீர்திருத்தமும்

ஓர் உபந்நியாசம்.

ஸ்ரீமான் ஜினராஜதாசர் அவர்களால் பிரான்சு பிரஹ்ம ஞான சபை தலைச் சங்கத்தில் 25—1—16 உபந்நியாசம்.

யுத்தம்:—உலகம் முழுமையும் இப்போது இந்த யுத்தத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு தேசத்தானையும் எவ்விதம் யுத்தம் பாதிக்கிறதென்பது இப்பொழுது இங்கே பிரான்சில் உங்களுக்கு நன்றாய்த் தெரியும். ஏனென்றால் வெர்டனில் சில மாசங்களாக இயற்கையின் கொடூரமான சக்திகள் மனிதர்களை வதை செய்கின்றன. வெடி மருந்துகளிலும் குண்டுகளிலும் சிறு அணுக்களின் சக்திகள் சேர்த்துவைக்கப்பட்டிருப்பதினால் உயிரற்ற ஜடமான ரசாயன பூதங்கள் மனிதர்களின் உயிருள்ள சரீரங்களை ஜயிக்கின்றன அதாவது வதைக்கின்றன. தூரத்திலுள்ள அடையாற்றிலிருந்து நான் இப்பொழுதுதான் வந்தேன். அந்த க்ஷேத்திரத்திலிருந்து அழகும் உயர்நலமும் வாய்ந்த எண்ணங்கள் உலகெங்கும் பரவுகின்றன. அவ்விடத்தில் பிரஹ்மஞான சபையின் அங்கத்தினர்களான நாங்கள் ஜனங்களின் உபகாரார்த்தம் யேற்பாடுகளை ஒவ்வொன்றாய் செய்து வருகிறோம். அந்த அமரிக்கையான யிடத்திலும்கூட எங்களுக்கு யுத்த சம்பந்தம் நேரிட்டது. அவ்விடத்தில்கூட ஜெர்மனி தேசத்தின் யுத்தக்கப்பலான எம்டனுடைய (Emden) பீரங்கிகளின் சப்தம் கேட்டது. உயர்ந்த கட்டடங்களின் மாடிகளிலிருந்து சத்துருவின் பீரங்கிகுண்டுகளினால் தீ மூட்டப்பட்ட சென்னைப்பட்டணத்திலுள்ள எண்ணை தடாகங்களின் சுவாலைகளைப் பார்த்தோம். ஒரு வாரத்துக்கு முன்னால் மத்திய தரைகடலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். போர்டு செட் (Port Said) என்ற

துறைமுகத்தை விட்டு ஜெனேவாத் துறைமுகத்துக்கு புகைக்கப்பல் புறப்பட்டது முதல் மரணம் எப்பொழுது சம்பவிக்குமோ என்ற எண்ணமேயிருந்துகொண்டிருந்தது. நாங்கள் கப்பலில் பிரயாணம் செய்கையில் ஜீவாட்சகப்படகுகள் (Life-boats) சமையத்தில் தாழ்த்துவதற்குத் தயாரிக்கப்பட்டிருந்தன. இரவும் பகலும் ஒவ்வொருவருடைய உயிர் அரைக் கச்சைகளைப்பக்கத்தில் வைத்துக்கொண்டிருந்தோம், ஒவ்வொருவருக்கும் ஜீவரக்ஷகப் படகுகளில் இடம்தயாராக யேற்படுத்தப்பட்டிருந்தது. கப்பலுக்குப் பக்கத்தில் சப்மரைன் என்ற கடற்குள் செல்லும் கப்பல்கள் இருப்பதாக எங்கள் கப்பலின் உத்தியோகஸ்தர்களுக்கு கம்பியில்லா தந்தி மூலமாய் எச்சரிப்புகள் வந்துகொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தோம். எதிராளியின் கப்பலுடன் சண்டை நேரிடுமானல் சண்டைக்குத்தயாராகயிருக்கும்பொருட்டு, எங்கள் கப்பலிலுள்ள பீரங்கிகளைப் பழக்குவதிலுண்டாகும் சப்தத்தைக் கேட்டும் வந்தோம். இவைகள் எல்லாம் எங்களுக்கு சதா யுத்தத்தைப்பற்றி ஞாபகப்படுத்தின.

அப்படியிருந்தும் இந்த யுத்தத்தினல் பிரான்சு தேசத்திற்கு ஏற்கனவே என்ன சம்பவித்திருக்கிறது? பிரான்சு தேசம் சீர்பட்டுவருவதின் ஆச்சரியத்தை உலகத்தார் பார்க்கவில்லையா? பிரான்சு தேசமானது முன்னைப் பார்க்கிலும் அதிகக் கீர்த்தி அடையவில்லையா? இந்தத் தேசத்தில் தாழ்மையான குடியானவனும், முன்னைப்பார்க்கிலும் உயர்வான எண்ணமுள்ளவனகவும், அதிக பலமுள்ளவனகவும், அதிகமாய்ப் பரித்தியாகம் செய்ய இஷ்டமுள்ளவனகவும், ஆகவில்லையா? இந்த யுத்தம் அவனை எதைச் செய்யும்படி தூண்டிவிட்டதோ அதினல் அவன் சரீர விஷயத்தில் கவனம் குறையவும், ஆத்மாவைப் பற்றி அதிகமாகக் கவனிக்கவும் நேரிடவில்லையா? நவீன நாகரீகத்தின் பயங்கரமான

அம்சமான இந்த யுத்தத்திலும் கூட உலகிற்கு அதிக நன்மையைக் கொடுக்கும் தன்மை யிருக்கிறது என்று இதனால் விளங்குகின்றது.

இந்த அம்சங்களை யெல்லாம் நம்முடைய சபையின் அங்கினத்தினர்களாகிய நாம் நன்றாய்த்தெரிந்து கொண்டு ஆறுதலையும் வெளிச்சத்தையும் கோருகிறவர்களுக்குத்தெளிவாயெடுத்துரைக்கவேண்டும்.

எதார்த்தத்தை அடைவதற்கு நாம் முக்கியமாகக்கொள்ளவேண்டிய எண்ணம் என்னவென்றால், மனிதன் ஒரு சரீரத்துக்குள்ளிருக்கும் சைதன்னியமென்ற தெளிவுதான். மேலும் மரணத்தினால் பாதிக்கப்படாத ஆத்மா அவன் என்றும்; சித்திரவேலைக்காரன் சித்திரம் எழுதுங்காலையில் கவனிக்கும் வெளிச்சம் நிழல் இவைகளைப்போன்றதுதான் ஜீவித்திருத்தல், மரணமடைதல் என்ற அம்சங்கள் என்றும்; அவன் ஈசுவரனுடைய நாசமற்ற ஒரு அம்சமென்றும், அவன் பிரபஞ்சத்தைப் பார்த்தும், அதின் சக்திகளைப் பரீட்சித்தும், அதின் அழகைக்கண்டும் சந்தோஷமடைவதற்காக பரமாத்மாவினிடமிருந்து வெளிப்பட்டவனென்றும்; உணர்ந்து அனுபவிப்பது முக்கியமாம். ஒவ்வொரு ஜீவாத்மாவும் தனியாகயிருக்கவில்லை. ஜீவாத்மாக்களின் ஒரு பெரிய சகோதரக்கூட்டத்தில் இவனொருவனாகயிருக்கிறான். ஒவ்வொருவனுடைய அபிவிர்த்தியும் மற்றவர்களுடைய க்ஷேமத்தைப் பொறுத்திருக்கிறதென்பதுதான் ஒவ்வொருவரும் முக்கியமாயறிந்து உணரவேண்டிய விஷயம்.

இந்த பெரிய விஷயமான சகோதரத் தன்மையை உணராததினால்தான், ஒவ்வொரு மனிதனுக்கும் மனிதவர்க்கத்துக்குமே துன்பங்களுண்டாகின்றன. இவ்விதத்துன்பங்களில் யுத்தமானதொன்று.

ஆத்மார்த்தமான உலகு வேறு என்றும் லௌகிகமான உலகம் வேறு என்றும் அவைகளுக்குள் பரஸ்பரம் சம்பந்

தம் இல்லையென்றும் சாதாரண ஜனங்களும் மதப் பயிற்சியுள்ள வித்வான்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வுலகம் முழுமையும் ஈசுவரனுடைய பிரபஞ்சம் என்று உணருகிறார்களில்லை. உலக வாழ்க்கையில் சுவர்க்கம் நரகம் இவைகள் இடம் வேறுபட்டிருக்கவில்லை. பிரபஞ்சத்தில் ஈசுவரனில்லாத இடம் கிடையாது. அவர் நினைவுக்கும் உணர்வுக்கும் அகப்படாத விஷயமும் கிடையாது. "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது கண்டா" யென்ற ஆன்றோர் வாக்கியம் இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது. "சுவர்க்கத்துக்குப்போனால் அங்கே நீர் இருக்கிறீர் நரகத்தில் போனால் அங்கேயும் உம்மைப் பார்க்கிறேன்" என்று ஓர் பெரியவர் கூறுகிறார். காலையில் இரக்கைகளை பரப்பிக்கொண்டு சமுத்திரத்தில் தூரமான பாகங்களில் போயிருந்தாலும் அவ்விடத்திலும் உம்முடைய கையானது என்னை நடத்துகிறது வலது கை என்னைப்பிடித்துக்கொண்டிருக்கிறதென்று ஒரு மகான் சொல்லவில்லையா? இதை நாம் உதட்டினால் உச்சரித்தும் இருதயத்தில் உணராமலுமிருப்பதினால், நம்முடைய வாழ்வை இரண்டு பாகங்களாகப் பிரிக்கிறோம். ஈசுவர விஷயமானதொன்று மற்ற உலக சம்பந்தமானதொன்று என்று இவ்விதமாய் நம் வாழ்வை இரண்டு பாகமாகப் பிறிப்பதுக் கூடாதென்று மதஸ்தாபகர்கள் வற்புறுத்தி சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பிறிப்பதினால்தான் துன்பமுண்டாகிறது. ஆகையால் ஒவ்வொருவரும், அன்பைப் பாராட்டவேண்டுமென்று அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். ஒரு மதத்தில் ஈசுவரனை விசுவாசிக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறது. அந்த விசுவாசமானது அயலானிடமும் செலுத்தப்பட வேண்டியதுதான். மற்றொரு மதம், அதாவது பௌத்த மதத்தைப் போலொத்தது, ஈசுவரனைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் ஜீவராசிகளுக்கெல்லாம் இரக்கத்தைக் காட்டவேண்டுமென்று மட்டும் சொல்லுகிறது. இந்த இரக்கமானது வாழ்க்கை

யில் அன்பை பாராட்டவேண்டியதே நியாயமென்று அனுபவத்துக்குக் கொண்டுவந்து விடும். மதஸ்தாபகர்களான குருக்கள் சொல்வதற்கு விரோதமாக அவர்களைச் சார்ந்தவர்கள் ஈசுவரனுடைய ஒரு உலகத்தை இரண்டாகப் பாவித்து நடந்து வருகிறார்கள். ஆகையால்தான் ஒவ்வொரு தேசமும் நாகரீகமடைந்தாலும், காட்டு மனிதனுடைய சுவபாவமும் நீங்காமல் இருந்துகொண்டே யிருக்கிறது.

நம்முடைய நாகரீகம் இன்னமும் காட்டு மனிதனுடைய சுபாவமுள்ளதாக யிருக்கவில்லையா? எதிர்ப்படும் எவரையும் கொல்லவில்லை யென்பதும், நாம் பலமுள்ளவர்களாக யிருக்கிறோமென்று நம்மைப் பார்க்கிலும் துற்பலமுள்ளவர் பொருளை பகிரங்கயாக திருடுகிறதில்லை யென்பதும் வாஸ்தவமே. ஆனால் பொருளுக்காக மட்டுமில்லாமல் அதிகமான கொலைகளும் கொள்ளைகளும் நடக்கவில்லையா? நம்முடைய கைத்தொழில் சாலைகளைப் பார்ப்போம். நாம் என்ன பார்க்கிறோம்? மனிதனுடைய மூளையைக் காட்டிலும் அதிக யூகமுள்ள யந்திரத்தின் முன்பாக அதை நடத்தும் ஒருவனைக் காண்கிறோம்! அவன் என்ன செய்கிறான்? அந்த யந்திரத்துக் குணவு கொடுத்து, 8, 10, 12 மணி நேரங்கள்வரை அதை நடத்துகிறான். அந்த யந்திரமானது ஒரு சிறிய வஸ்துவைத்தான் உண்டாக்கும்! அதாவது காலால் தள்ளும் வண்டி (bicycle) செய்வதற்கு யேற்பட்ட கைத்தொழில் சாலையில், ஒரு குறிப்பிட்ட யந்திரத்திலிருப்பவன் சக்கிரத்தின் ஆரக்கால்களை மட்டும் செய்வான். முழுச் சக்கிரத்தையும் செய்தானென்ற திருப்தி அவனுக்கிராது. தானே ஒரு காலால் தள்ளும் வண்டியைச் செய்தேனென்ற சந்தோஷத்தையும் அவன் ஒருக்காலும் அறியமாட்டான். நம்முடைய நவீனக் கைத்தொழில்ச் சாலையெல்லாம் இத்தன்மையதுதான். உண்டாக்குவதில் மனிதனுக்கு உண்டாகும் சந்தோஷத்தை நாம் கொன்றுவிட்டோம். யந்திரங்களில் வேலை செய்யும் நம்முடைய சகோ

தரர்களை யந்திரங்களாக ஆக்கிவிட்டோம் இது ஒரு வகையாகக் கொடூரமான மரணமல்லவா? ஏனெனில் இது சரீர சம்பந்தப்பட்டதல்ல. ஆனால் ஆத்ம சம்பந்தமானது. இந்த விதமான ஆத்மாக்களின் மரணத்தைப் பற்றி நம்முடைய தற்கால நாகரீகம் தலையெடுத்துப் பேசவில்லை. ஜனங்களின் பேரில் அபிமானம் வைத்து வேலை வாங்கும் அபூர்வமான தேச அபிமானிகளைத் தவிர சாதாரணமாக வேலைக்காரன் விஷயத்தில் வேலை வாங்குகிறவர்களால் என்ன அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது? உழைக்கிறவன் சுமை சுமக்கும் பிராணி. அவன் வேலை பணத்தினால் மதிக்கப்படுகிறது. எதார்த்த உழைப்புக்குப் பணம் வெகுமானமாக மாட்டாது. உழைப்பில் சிலவாகும் மிருகத் தன்மையான சக்திக்குப் பணம் சரியான பலன்தான். எல்லா உழைப்பிலும், கவனம், மனத்தின் ஒருமைப்பாடு உண்டு இவைகளில் சிலவாகும் சக்திகளுக்கும் அபாயகரமான காரியங்களை செய்வதில் நேரிடக்கூடிய ஆபத்துக்களைக்கவனியாமல் துணிவுடனிருப்பதற்கும் சரியான மதிப்பு இல்லையா? மிருகத் தன்மையான சக்தி தவிர மற்றபடி வேலைக்காரன உபயோகப்படுத்தும் சக்திக்கு பிரதி பலன் வேலை வாங்குகிறவன் வேலைக்காரன் விஷயத்தில் பக்ஷத்துடன் சகோதர பாவததைக் காட்டுவதினால் யேற்படாதா? ஊழியத்திலும் வியாபாரத்திலும் இந்த சகோதர பாவத்தை நாம் காட்ட வேண்டுமென்று நினைக்கிறதில்லையே? அப்படியிருந்தும் நாம் நாகரீகமுள்ளவர்களென்று சொல்லிக்கொள்கிறோம். எதார்த்தத்தில் நாம் எல்லாரும் காட்டு மனித சுபாவமுள்ளவர்கள் தான்.

(தொடரும்.)

கே. எஸ். ராமசந்திரய்யர்.

இல்லற தருமம்.

(313-ம் பக்கத்தொடர்ச்சி)

மேற் கூறியவாறு கல்வியுள்ள ஓர் மனைவியைப்பெற்று இல்லறத்தை வழுவா தியற்றும் ஒருவன்

"இயல்பினுனில் வாழ்க்கை வாழ்பவனென்பான்
முயல்வாருளெல்லாந் தலை"—என்றபடி புலன்களை விட முயல்வாரெல்லாருள்ளும் தலையாவான். அன்றியும்,

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்,
இல்வாழ்வானென்பான் றுணை"—என்ற திருக்குறளின் கருத்தையும் உற்று நோக்கவேண்டும். (துறந்தார்=ஆதாரமானவரால் துறக்கப்பட்டார். துவ்வாதவர்=நல்கூர்ந்தார். இறந்தார்=ஒருவருமின்றித் தன் பால் வந்திறந்தார்)

சிவபிரான் பார்வதி தேவியாரைத் திருமணஞ் செய்த காலையில் தேவர் முதலியோர் வடதிசை நிறையத் தென்திசை யுயர்ந்ததால் சிவபிரான் கட்டளைப்படி அகத்தியர் தென்றிசையிற் பொதிகை மலையிலிருக்க வருகையில் ஒரு மரத்தில் தலை கீழாகத் தொங்கிக்கொண்டிருந்த இருடிகூட்டங்களைப் பார்த்து நீங்களேன் இவ்வாறு தொங்குகின்றீர்களென, இருடிகள், எங்கள் சந்ததியில் அகத்தியன் என்ற ஒருவன் பிறந்து இல்லறமடையாது இருக்கின்றானாதலால் எங்களுக்கு இத்துன்பம் நேரிட்டதென்று மறுமொழி கூற, அகத்தியர் அது கேட்டுத் திடுக்கிட்டு அவர்களைத் தன்னைச் சபியாதிருக்க வேண்டி, நானே அகத்தியன் அதிசீக்கிரத்தில் இல்லறமடைந்து உங்களை இத்துன்பத்திலிருந்து நீக்குகின்றேன் என்று விதர்ப்ப நாடடைந்து அவ்வரசன் யாகத்திற் பிறந்த உலோபாமுத்திரையை அதிகப் பொருள் தந்து மணந்து தாதைகளைச் சுவர்க்க மடைவித்தார் என்ற கதை யொன்றுண்டு. மேற் கூறியவாறு இல்லறம் நடாத்துமொருவனால் பிதுர்க்களும் சுவர்க்கம் பெறுவரெனில் இதன் பெருமையைப் பற்றியும் விரித்துக் கூறுவது மிகையேயாம்

நாயகன்:—இனி இல்வில் வாழ்வோன் நாயகியைப் பரிவுட னடத்தும் பான்மையனாகி எல்லோர்க்கு மினியனாய் ஊருடன் கூடியும் உலகத் தோடொத்தும் வாழ்பவனாய் 'தனக்குத் துணை தான் செய் அறம்' என்றவாறு தான் செல்லுலகத்திற்குத் தன்னோடு துணையாக வரும் எல்லாத் தர்மங்களையும் வழுவற நடாத்தும் வன்மையும் தன்மையு முடையனாயிருத்தல் வேண்டும்.

இங்ஙனமன்றி அறன்கடை நிற்பார் பலராவர் தம்மாட்டுள்ள பொருளை விட்டுப் பிறர் பொருளை நச்சும் பேதைமைக் குணமிவர்களுண்டாவ தெவனோ? சீதையைக்கவர்ந்து நாசமுற்ற இராவணன் கதையும், அகலிகையை விரும்பியாயிரங் கண்ணனான அமரர் தலைவன் கதையும், மணிமேகலையை விரும்பி வெட்டுண்ட உதயகுமரன் கதையும் போன்ற பல உண்மைச் சரிதங்கள் அன்னோர் எண்ணங்களிற் புகுந்தில போலும். அந்தோ இவரை மிருகத்தினுங் கடையரெனக் கூற எண்ணிறந்த காரணங்களுள்ளனவே. பிறர் மனையைப் பெற்ற தாயெனக் கொள்பவனே பேரறிவாளன்.

'பகை பாவ மச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான்கண்'

என்றவாறு பிறனில்லாள்கண் நெறி கடந்து செல்வானிடத்துப் பகையும் பாவமும் அச்சமும் பழியும் என்னும் இந்நான்கு குற்றமும் ஒருக்காலும் நீங்காவாம்.

'பிறர் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற ஒழுக்கு'

எனும் திருவள்ளுவர் வாக்கையும் உற்று நோக்குக. இனி, ஒருவன் விவாஹ முடிந்த சின்னாட் கழிந்தபின் மற்றொரு பெண்ணை மணக்கக் கருதுவோனாயின் அவனை பல கலமுகக்கும் பட்டிநாயாவன். இவன் "(ஈருர் வேளாண்மையும்,

தாரமி ரண்டும் தனக்காகா' எனும்பழமொழியின் பொருளை நன்கு தெளிவாகுக.

ஆகலின் தான் முன் மணந்த மனைவியையே தன் ஆயுளிறுதிகாறும் தனக்குரிய துணையாகக்கொண்டு வாழ்பவனே உத்தமன். மனைவி யறிவிலியாயிருப்பினும் அவளை அறிவூட்டி நல்வழிப் படுத்துவதே நாயகன் கடமையாம்.

இவ்வாறுள்ள காதல ரிருவரும் ஓர் பண்டியிற் பூட்டிய இரண்டெருதுகள் போலவும், ஒரு வத்துவைப் பார்க்கும் இரண்டு கண்கள்போலவும், ஒற்றுமையாக விருந்து விருந்தோம்பல், இன்மொழி கூறல், பெற்றோர்ப் பேணல், பெரியோர்ப் பேணல், முதலிய இல்வாழ் தருமங்களை யெல்லாமிடையறுதியற்றி வருத லேற்றலாகும்.

நாயகி:—இஃ திங்ஙனமாக, எல்லா விதத்திலும் தன் நாயகற் குயிர்த்துணையா யிருப்பவளாகிய நாயகியும் 'குலமகட்குத் தன் கொழுநனே தெய்வம்' "(வணங்கலணிகலம் சான்றோருக் கென்றும்) அணங்கல் வணங்கின்று பெண்' என்பன முதலாகிய ஆன்றோர் வாக்குகளையும்,

தெய்வந்தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை!

என்ற திருக்குறளினுட் பொருளையும் என்றும் மறவாளாகிக் கற்பிலக்கணங்களைக் கடைப்பிடித் தொழுகுபவளாயிருத்தல்வேண்டும். ஸ்திரீகளுக்கு என்றும்ஸ்வாதந்தரியமே கிடையாது. அவர்கள் பாலயத்தில் விவாஹமாகும் வரை தங்கள் பெற்றோர் பாதுகாப்பினும், விவாஹமான பின்னர் தம் புருஷர் பாதுகாப்பினும், இறுதிக் காலத்தில் முதுமைப் பருவத்தில் தம் மக்கள் பாதுகாப்பினும் இருக்கவேண்டியவர்கள், என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மணம் புரியப்பெற்ற ஓர் ஸ்திரீ கொழுநனையே பெற்றோராயும், பெரியோராயும், குருவாயும், பாவித்து, பணிவிடை புரிந்து வரவேண்டும். இங்கு கணவனைக் குருவாகவும் பாவிக்கவேண்டுமென்பது மிகவும் முக்கியம். ஏனெ

னில் தெய்வத்தினிடத்திற் காட்டிலும் கண் கண்ட தெய்வமாகிய குருவினிடத்திலேயே மிகுந்த பயபக்தி உலகத்தவர்க்குண்டாம். ஆதலின் நாயகனைக் குருவெனப் போற்றுபவளே குலக் கொழுந்தாவாள். நாயகன் கருத்துக் கேற்றபடி ஒழுகாத நன்றியில் மனைவியைக் கட்டியாளுவதினும் நலமிக்க சந்நியாசத்தை நாடுதல் நாற்பதின் மடங்கு நன்று. இது பற்றியன்றோ,

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டாயின்
எத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக விருப்பாளே யாமாகில்
கூறாமற் சந்யாசம் கொள்'

என்றார் ஔவைப் பிராட்டியார். காதலிருவர் கருத்தொன்றி ஆதரவு பட்டதே யன்றோ இன்பமெனப் படுவது காதலரிருவரும் தமக்குள் ஒருவருக்கொருவர் மனமாறு கொள்ளின் தாம் நடாத்தும் இல்வாழ்க்கையின் பயன்யாது?

" அன்னை தயையும் அடியாள் பணியு மலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும்—வன்னதன
வேசிதுயிலும் விறல் மந்திரி மதியும்
பேசிலிவையுடையாள் பெண்" என்ற

இலக்ஷணத்திற் கிலக்ஷியமாவாளே பெண். இல்வாழ்க்கை, இவ்வுலகிலுள்ள மானிடரை அருளோடு அறமல்கும் அகமுடைய ஆன்றோர்க்கு எனக் கருதப்பட்டுள்ள மோக்ஷபதவி யென்னும் மற்றொருயரிய உலகிற்கு நடாத்திச் செல்வதோர் நீண்ட பாதை.

இன்னும், ஓர் நாயகியானவள் தன்னைக் கொண்டவன் எத்துணை வறியனாயினுமே தனவந்தனாயினுமே அவனையே என்றும் பரமதுணையாகப்பற்றி அவனது வருவாய்க்கேற்ற பொருளழிவு செய்பவளாயும் 'பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்' என்பதையும் 'குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்' என்பதையும் கேள்வி மாத்திரத்திலும் கற்றல் மாத்திரத்திலும் வையாமல் தன் செய்கையிலும் காட்டி வருபவளாயுமிருத்தல் வேண்டும்.

தனது தவம் சித்தியுற்றதாவென்று அறிய விரும்பி, தன்மீது எச்சமிட்ட ஒரு கொக்கை உருத்து நோக்கி எரித்துவந்த கொங்கண விருடி, மயிலையில் திருவள்ளுவர் மனைவியார், தமது கொழுநர்க்குத் தொண்டு செய்துகொண்டிருந்தமையாற் பிக்ஷையிடச் சிறிது காலந் தாழ்க்கவே சீற்றத்துடன் விழியை உருட்டிப் பார்த்த அந்த விருடியை நோக்கி அம்மாது 'கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா' என்று கேட்டவளவில் ருஷி திடுக்கிட்டு, அவர் தம் கற்பின் திண்மையையும மகிமையையும் மிக மெச்சினன் என்றும், ஒருக்கால் திருவள்ளுவர் தம் தேவியார் கிணற்றிற் கயிற்றோடு தோண்டியை யிட்டுப் புனலைக்கிணற்றின் பாதியளவில் தூக்கிக்கொண்டிருக்கும்போது அம்மனைவியை யழைக்க அவள் தன்னையழைத்ததின் காரணம் என்னவோவென்று உடனே தோண்டியைத் தூக்கிய பாதிக்கிணற்றளவிலே விட்டுவந்தெய்தியக்கால், அத்தோண்டி நீருடன் அப்பாதிக்கிணற்றளவில அந்தரத்தே நின்றுகொண்டதென்றும், பின்னொருகால் அப்பெண்மணி தன் கொழுநர்க்குப் பழஞ்சோறு பரிமாற அது கண்ட அவர் 'இவ்வுணவு தழலெனச் சுடுகின்றது எவ்வாறுண்பேன்' என வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறிய சொற்களைக் கேட்டுத் தக்ஷணமே சென்று, விசிறி எடுத்து வந்தசைக்க ஆஹா! அப்பழயதிலிருந்து ஆவி குபுகுபென்று கிளம்பி வந்ததென்றும், பல உண்மைக்கதைகளை நாம் பன்முறை சற்றுங் கேட்டிருப்பதுந்தவிர மேற்கூறிய இக்கதைகள் கற்பிக்கும் நீதிகளையும் நன்கறிகின்றோமல்லவா! அங்ஙனம் அஞ்ஞான்று தம் தேவியார் தம்மிடத்துப் பணிந்தொழுகிவந்தமையாலன்றோ? பத்தினி பரகதியடைந்தபோது

'அடிசிற்சினியாளே அன்புடையாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
என்றூங்கும் என் கணிரா'—என்று

திருவள்ளுவர் தம் நாயகிக்கிரங்கிப் பாடுவாராயினர்.

கற்பு—இது, மாதர்க்கணிகலமாகக் கொள்ளப்படுவது கற்பெனும் பெருந்தகைக்குணமாம். இத்தகைய கற்பை தம்மிடம் பெற்றிருந்தமையா லன்றோ முன்னர்க் கூறிய கதைகளில் வந்துள்ள அற்புதச் செய்கைகள் பல நிகழ்தற்கேதுவானது.

பின், கற்பின் சிறப்பை நிறுவதற்கு ஆதாரமாக எடுத்துக்காட்டப்படும் பல சரிதங்களுள் நளாயினியின் கதையும் மிக வியக்கத்தக்கதொன்று. இவள் தன் கணவன்மாட்டுக்கற்பி னெறியி னின்னின்று வருங்கால் ஓர் போது இவளது கற்பைப் பரீக்ஷிக்க எண்ணி தன் திவ்ய ஸ்வரூபத்தை மாற்றி குட்டம் முதலிய பல பிணிகளைத் தன் சரீரம் பொருந்தியதாகத்தன் கணவன் காட்டவும் தான் மனவேறுபடாளாகி முன்னிலும் பதின்மடங்குள்ளன்புட னுவந்து பணிசெய்து வருவாளாயினள். இதுவன்றோ கற்பிற் கழகு?

பின்னொருகால் இவன் தன் நாயகன் விரும்பியவாறு ஒருநாளிரவு அவனைக் கூடையில் வைத்து (கூடையில் வைத்தகாரணம்—தான் நடக்கமுடியாதவனுயும நோயாற் பீடிக்கப்பட்டவனுயும் காட்டினமையால்) அவனுற் சுட்டப்பட்ட பொது மகளில்லில் விட்டு அன்றிரவு புலர்ந்தபின் வைகறையில் முன்போல தன் கணவனைக் கூடையில் வைத்தெடுத்துத் திரும்பித் தன் மனை நோக்கி யேகும் மார்க்கத்தில், தமது பூர்வவினையால் கழுவேற்றப்பட்டு உபத்திரவ மடைந்து கொண்டிருந்த மாண்டவ்யரென்னு முனிவரின் பாதங்களில் அக்கூடை பட மிகுந்த வாதையுண்டான போது, அவ்விருடி வெகுண்டு ‘பெண்ணே! நீ பொழுது விடிந்தால் மாங்கல்ய மறுப்பாய்’ எனச்சபிக்க அதைக்கேட்ட நளாயினி பொழுது விடியாமலிருக்கக்கடவதென்று மறு சாபமிட, அவ்வாறே அன்று பகலவன் பதுங்கி யொளித்தனன்.

இன்னணம் அவள் தனது கணவனிடத்துப் பூண்ட பக்தியும் அன்பும் பணியும் பதிவிரதா தர்மமுமன்றோ இத்தகைய அரியசெயல்கள் நிகழ்தற்குக் காரணமாயிருந்தன.

ஆ! கற்பின் சக்தியையும் வெற்றியையும் கணித்தறியலாகுமோ ?

கோவலன் அகாரணமாக அரசனுக்கணையால் வெட்டுண்டிறந்தபொழுது கண்ணகி குலை பதறி 'இந்நகரைத் தீயுண்ணுக' எனச்சபித்த வக்கணமே அக்கினிக்கடவுள் அவள் பணி தலைமேற்கொண்டு அந்நகரையுண்டழித்தானன்றோ!

சாவித்ரி யென்பாள் தான் கொண்ட கற்பினால் யமனையும் வென்றாளென்பதும், நளன் தன் காதலியைக் கானத்து நீத்துச்சென்றபோழ்து தமயந்தியை அரவம் தீண்டவர அதனால் அவள் கூக்குரலிட்டதைக் கேட்டு ஓர் வேடன் விரைந்து வந்து அத்துன்பத்தினின்றும் அம்மேதகு பிராட்டியை விடுவித்துஅறிவீனமாய் அவள் பின் றொடர அன்னவள் சாபத்தால்அப்பாதகன் எரிவாய் நரகிற்கிரையானனென்பதும் யாவரும் நன்கறிந்த விஷயமே. நிற்க.

இனி, கணவரில்லாத விடத்து (வெளியூர் சென்றிருப்பினுமே அன்னோரை யிழந்திருப்பினுமே) தம்மை ஆடையாபரண புஷ்பாதிகளால் அலங்கிருதம் செய்துகொள்ளலாகாது. அவ்வாறு செய்வோர் அந்தோ!

'உண்ணல் பூச்சூடல் நெஞ்சுவத்த லொப்பனை
பண்ண லெல்லா மவர் பார்க்கவே யன்றோ'

என்னும் நீதிவாக்கின் கருத்தைச் சிறிது முணராதவராவர்.

ஆகவே பெண்கள் தங்களை யணிந்துகொள்வது பிறர் பார்த்தானந்திப்பதற்கும், பிறர் விரும்புதற்கு மன்றென்றும், தம் நாயகர்க்குள்ள கிளர்ச்சியும், விருப்பமுமுண்டாதற்கே யங்ஙனம் செய்துகொள்வதென்றும் நன்கறிகிறோமாதலால் ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தன் கணவன் தன்னகர் நீங்கிப் புறநகர் சென்றிருந்தக்கடையும் அவன் மீளுமளவும் தன்னிடத்திலுள்ள கை யழகோடு திருப்தியுற்றிருத்தலே யுத்தமம். (தொடரும்)

தி. யம். மொகையதீன் கவிராயர்,
உதவித் தமிழ்ப்பண்டிதர், மதனபள்ளி காலேஜ்.

பிரஹ்மக்ஞான தர்சனம் (பால பாடம்.)

14-வது அத்தியாயம்.

மந்திரவித்தை (தொடர்ச்சி)

திரும்பிவரும் பிரயாணி இப்போது தைவீக மார்க்கத்துக்கு மிகவும் சமீபத்திலிருப்பதினாலே அம்மார்க்கத்திற் செல்லும் பிரயாணிகளின் சந்தோஷமும் நம்பிக்கையுமுள்ள முகங்களையும், அதிக தேஜஸ் உள்ள உபகாரிகளையும், அவ்வுபகாரத்தைப் பெற்று ஆனந்தப் பெருக்குடனிருப்பவர்களையும், இவ்விதம் உபகார மடைந்தவர்கள் வேறு சிலருக்குபகாரம் செய்வதையும், பார்க்கிறான்.

ஆசுர மார்க்கத்திற் செல்லுகிறவர்கள் போலல்லாமல் இம்மார்க்கத்திற் செல்லுகிறவர்களுக்குப் போகப் போக சுமை குறைந்துகொண்டு வருவதை இவன் பார்க்கிறான் ஏனென்றால் அவர்கள் தங்களுடைய சுமைகளை பிறருக்குத் தெரியாமலே சக்திகளாகவும் குணமாகவும் மாற்றிவிடுகிறார்கள். அவர்கள் பிறருக்கு எவ்வளவுக் கெவ்வளவு உதவி செய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அதிக பலிஷ்டர்களாக வளருகிறார்கள். ஆகையால் அவர்கள் மிகவும் கஷ்டமான இடங்களுக்கு வரும்போது அக்கஷ்டங்களை தங்களுடைய பலத்தினாலே கொஞ்சமும் லட்சியமில்லாமல் வெகு இலகுவாய்க் கடந்துவிடுகிறார்கள்.

இவ்விதம் பிறருக் குதவி செய்வதினால் தைவீக மார்க்கத்திற் செல்லுகிற பிரயாணிகள் மிகவும் அன்புள்ளவர்களாகவும் வளருகிறார்கள். அதனால் அவர்கள் சரீரங்களினின்று சுயநயம் பேணாத அன்பின் தேஜசானது பிரகாசித்து அவர்களுக்கும் பிறருக்கும் உபகாரமாக அம்மார்க்கத்திலுள்ள இருண்ட இடங்களை வெளிச்சப் படுத்துகிறது.

இதைப் பார்த்து, ஆசுர மார்க்கத்திற் களைப்படைந்து திரும்பி வருகிற பிரயாணியானவன் தன்னைச் சுற்றியிருப்ப

வர்களிடம் இதைப் பற்றிச் சொல்லுகிறான். இதைக் கேட்பவர்கள் தங்கள் மார்க்கத்தில் மேற்செல்ல அதிக ஆவலுடனிருப்பதால் அவன் சொல்லுவதைக் கவனிக்கிறதில்லை. ஆசுர மார்க்கத்திற் செல்லுகிறவர்கள் தாங்களே அனுபவத்தில் அறிந்தாலொழிய இக்கதையை நம்புகிறதில்லை.

மதிமயங்கின சில பிரயாணிகள் ஆசுர மார்க்கத்திற் கடைசிவரை சென்று யாதொரு பிரயோசனத்தையு மடையாமற்போகிறார்கள். தைவீகமார்க்கத்திற்செல்லுகிறவர்களோ தங்களுடைய நீண்ட கடினமான பிரயாணத்தினால் நல்ல பலனை யடைகிறார்கள்.

ஆசுர மார்க்கத்திற் கடைசிவரை செல்லுகிற பிரயாணிகள் பலிஷ்டர்களாக ஆகிறது உண்மையே. ஆனால் அவர்களுடைய பலத்தின் முழுப் பிரயோசனத்தை யவர்கள் அனுபவிக்கிறதில்லை. ஏனெனில் அவர்கள் ஒருவரையொருவர் நம்பாதவர்களாயிருப்பதால் அவர்கள் ஒன்று சேருகிறதில்லை.

ஒவ்வொருவனும் தனக்காகவே ஜீவிக்கிறான். அவன் கடினமும் குரூரமும் அன்பில்லாததுமான சித்தமுள்ளவனாயிருக்கிறான். தன்னை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு தன் தோழனைத் தொலைத்துவிடுவான். இம்மார்க்கத்தில் முதற்படிகளைக் கடந்த உடனே அவர்கள் கொஞ்சம் அதிகமான அல்லது குறைந்த பலமுடையவர்களாக ஆகிறார்கள். அவர்களுக்கு ஆசுர மந்திரவாதிகள் அல்லது அக்ஞான சகோதிரர்களென்று பேர். அவர்கள் பலிஷ்டர்களாயிருந்தாலும் சந்தோஷமுள்ளவர்களல்ல. அன்பு பாராட்டுவதிற்திறமையுள்ளவன்தான் சந்தோஷமாயிருப்பான். ஆசுர மந்திரவாதியோ அன்பென்ற கயிற்றை அறுத்து விட்டவன்.

இதுவன்றியில் அவன் எவ்வளவு சிரமப்பட்டு உழைத்தாலும் தைவீக மந்திரவாதிபோல் அவ்வளவு பலிஷ்டனாக

ஆகிறதில்லை. இது அவர்களுக்கு மிகவும் அருவருப்பான உண்மையாயிருக்கிறது. தைவீக மந்திரவாதிகளுக்கு ஞான சகோதர்களென்று பேர்.

இவ்விரு வகுப்பாரும் சகோதர்களே. ஏனெனில் அவர்களெல்லாம் கடவுளுடைய பிள்ளைகள். அப்படியிருந்தும் அவர்கள் ஒருவருக்கொருவர் நேர் விரோதிகளாயிருக்கிறார்கள். தைவீக மந்திரவாதி விகாசமுறைக்கு அனுகூலமுள்ளவனாகவும் ஆசுர மந்திரவாதி அதற்குப் பிரதிகூலமுள்ளவனாகவு மிருக்கிறான். ஆசுர மந்திரவாதிகள் விகாசமுறைக் கிடையூறு செய்யப் பிரயாசைப்படும் காரணம் யாதெனில் விகாசமுறை முற்றுப் பெறுங் காலத்தில் அவர்கள் வல்லமை யிழந்து நூதனமான அண்டங்களிலும் நூதன லோகங்களிலும் தங்களுடைய நீண்ட கஷ்டமுள்ள பிரயாணத்தை மருபடியும் ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்று அவர்கள் அறிவார்கள்.

ஆசுர மந்திரவாதிகளிற் சிலர் தங்கள் மார்க்கத்திற் கடைசிவரை செல்லுமுன் அது பிரயோசன மற்றதென்று தெரிந்துகொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் அம்மார்க்கத்தில் வெகுகாலம் செலவழித்து அதில் அதிகப் பற்றுதலுள்ளவர்களா யிருப்பதினாலே அதைவிட்டுத் திரும்ப முடியாதவர்களாய் நல்ல ஜீவர்களைக் கலக்கி சோதனைகளுக்குட் படுத்துவார்கள். அந்த ஜீவர்கள் இவ்வித சோதனைகளினின்றும் வெற்றியடைந்தால் மேற்சொன்ன ஆசுரமந்திரவாதிகள் வருத்தமடையாமல் சந்தோஷப்படுவார்கள். இவ்விதம் நல்ல கர்மத்தைத் தேடிக் கொள்ளுவார்கள் விகாசமுறையில் மேன்மையை அடைகிறவனுக்கு சோதனைகள் வரவேண்டியது அவசியமாயிருப்பதாலும் அவ்வித சோதனைகளை இவர்கள் கொடுப்பதினாலும் இவர்களுக்கும் துஷ்கர்மம்குறைந்துவரவர சன்மார்க்கத்துக்குவருவார்கள். "மேரி கோரில்லி" என்பவர் 'சாத்தன் துக்கம்' என்று எழுதிய கதையில் இத்தகைய ஒரு ஜீவனைப்பற்றி எழுதியிருக்கிறார்.

வி. வெங்குசாமி ஐயர்.

(316-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 3. களம் 5.

காலம்:—இரவு. **இடம்:**—வனம், மீராபாயின் குடிசை. **நாடகபாத்திரர்:**—சுந்தரீபாய்.

சுந்.—(தனக்குள்) எங்கே, மீராவை யின்னும் காணோம்? இன்னும் கிருஷ்ணன் கோயிலிலிருந்து வரவில்லையோ? விளக்கு வைத்தொரு யாமப்பொழுதாய் விட்டதே. இன்னமுமா பஜனை பண்ணிக்கொண்டிருப்பாள்? சில சமயங்களில் நெடுநேரம் பஜனை செய்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இருந்தாலு மிவ்வளவு நேரமாகுமோ?—ஐயோ, இந்த விடததிலெப்படித் தானவள் தனியாயிருக்கிறாளோ? எனக்கென்னவோ பயமாயிருக்கிறதே. இப்படியு மீசனவள் தலையிலெழுதிவிட்டானா? ஒரு குற்றமும் செய்தவளல்லவே. ஒரு பாபமு மறியாதவள். பக்தி பண்ணிப் பிரயோஜனமென்ன? பகவானிவளைக் கவனிக்கிறாரா? இல்லையே. பக்த வத்ஸலனென்ற பெயர் வகித்தாற் போதுமா? அதெல்லாம் பாகவதர்கள் பிழைப்புக்காகச் சொல்லுகிறதல்லவா? இவளெப்போதும் கிருஷ்ணனை பஜித்துக் கொண்டிருக்கிறாளே. அதனாலென்ன லாபத்தை யவளடைந்தாள்? ராமனாவது கிருஷ்ணனாவது! எல்லாம் கட்டுக் கதை தான். இவளுக்கு நாளுககு நாள் துன்ப மதிகரித்துக் கொண்டு தானேயிருக்கிறது. இன்னும் கொஞ்ச நோத்துக்கெல்லாம் தன்னை மாய்த்துக் கொள்ளப் போகிறாளே. அவளுடைய கிருஷ்ண பகவானவளை யெப்படிக் காப்பாற்றப் போகிறார். பார்ப்போம். (நின்றுற்றுக் கேட்டு) அது யாரங்கே? மீராவாகத் தானிருக்கவேண்டும். வேறு யாரிங்கே வரப்போகிறார்கள்? இந்த விருட்டில் நிர்ப்பயமாக வருகிறாளே!

(மீரா வருகிருள்.)

மீரா.—சுந்தரீ! இந்த இருட்டிலிங்கெதற்காகவந்தாய்? விசேஷமேதாவதுண்டோ?

சுந்.—மஹாராஜா வுனக்கொரு லிகிதமெழுதி யென்னிடம் கொடுத்தனுப்பியிருக்கிருர். அதைக் கொண்டுவந்திருக்கிறேன்.

மீரா.—என்ன லிகிதம், சுந்தரீ? நீ ஊஹித்த படியே யவருக்கென்மீது நல்ல மனது வந்துவிட்டதோ? அதைக் கொடு.

சுந்.—அதென்னமோ. என்னிடமதிலெழுதியிருக்கும் சமாசாரத்தைச் சொல்லமாட்டேனென்று விட்டார்.

(மீரா கடிதத்தை வாசித்துத் திடுக்கிட்டு நிற்கிருள்.)

சுந்.—என்ன மீரா? (மீராகடிதத்தைக்கொடுக்கிருள். சுந்தரியதை வாசிக்கிருள்) இப்படியும் தாஞெருவர் கடிதமெழுதுவாரோ? தற்கொலை செய்துகொள்ளும்படி யொருவர் கட்டளையிட்டதை நானிதுவரையிற் கண்டதுமில்லை கேட்டதுமில்லையே.

மீரா.—எல்லாமென் தலைவிதி. இந்தப்பாபி இப்புவியை விட்டுத் தொலைந்தால் தானவருக்கு சுகமுண்டு. இக்கடிதத்தினு லவருக்கென்மீதெவ்வளவு கோபமிருந்தாலுமென்னிடத்திலுள்ள நம்பிக்கை மாத்திரம் குறையவில்லை யென்பது விளங்குகிறது. அது ஆச்சரியமாகத் தானிருக்கிறது

சுந்.—நன்ருய்த் தானிருக்கிறது நம்பிக்கை! நான் சொன்னதைக் கேட்கமாட்டேனென்ருயே. அதற்குப் பிரயோஜனத்தைப் பார்த்தாயா? நீ யிங்கிருந்தா லவரிப்படித் தானுன்னை வருத்திக் கொண்டிருப்பார்.

மீரா.—சுந்தரீ, நீ யிப்படிப் பேசுவது கொஞ்சம்கூட எனக்குப் பிடிக்கவில்லை. என்கஷ்டகாலம் நானிதையெல்ல'

மனுபவிக்கிறேன். நீ யேனிப்படி யெல்லாம் பிதற்றுகி
றாய்? இனிமஹாராஜாவைக் குறித்தொன்றும் கெடுதலாய்ச்
சொல்லாதே. அவரா இதையெல்லாம் செய்கிறார்? என்னு
டைய ஜன்மாந்தர வினைகளல்லவோ என்னை யிப்படித்
துன்பப்படுத்துகின்றன. சுந்தரீ,மஹாராஜாவுக்கு யாராவது
துர்ப்போதனையைக் கொடுக்கிறார்களா? இல்லாவிட்டா
லவரிவ்வளவு என்மீது கடிந்துகொள்ளக் காரணமென்ன?
நானுயிருடனிருக்கக் கூடாதென்றவ ரெண்ணும்படிக்
கென்னகுற்றம் செய்தேன்? அவர் புத்திமானில்லையா? ஒன்
றும் தெரியாதவரா?

சுந்.—(தனக்குள்) சமாசாரத்தை யூகித்துவிட்டாளோ?

மீரா.—சுந்தரீ,நானிப்படியெல்லாம் சொல்வதுஎனக்கு
மாள இஷ்டமில்லாத தாலன்று. பாம்பைத் தரித்துக்
கொள்ளத் துணிந்தவளுக் கிதொரு கஷ்டமா? மிமேலுந்த
சரீரத்தி லபிமான மிருந்தாற்றானே சரீரத்தியாகம் செய்ய
நானஞ்சவேண்டும். இந்த சரீரத்தி லபிமானம் வைக்கக்
காரணமே கிடையாதே. இந்த சரீரம் போவதாலெனக்கே
தாவது கெடுதலுண்டாகு மென்றிருந்தாலன்றோ நான்
வருத்தப் படவேண்டும். உள்ளே யிருக்கப்பட்ட ஆத்மா
அழிவற்றதல்லவா. நீயும் நானும் குழந்தையா யிருந்தபோ
தெந்த வுடை தரித்திருந்தோமோ அதைய யிப்போது
தரிக்கிறோம்? அப்போதைக் கப்போது மாற்றிக் கொள்ளுகி
றோமல்லவா? அதேமாதிரி தானிந்த ஆத்மா அதனுடைய
சரீரத்தை யடிக்கடி மாற்றிக் கொள்ளுகிறது. ஆனால தெப்
பொழுதும் சாச்வதமானது. இந்தச் சரீரமோ அநித்ய
மானது. அழிவுக்காகவே ஏற்பட்டது. நாமெப்போதிந்தப்
புவியிற் பிறந்தோமோ அப்பொழுதே யிந்தச் சரீரமழியப்
போகிறதென்பது நிச்சயம். அப்படியிருக்க நாமாத்மாவை
மறந்து சரீரத்திலதிக அபிமானத்தை வைப்பதுஞாயமல்ல.
ஆகையால் நான் சரீரத்யாகம் செய்வதில் மனவருத்தப்படு
வானேன். இந்தச் சரீரம்போனால் வேறேதாவது சரீரம்

கிடைக்கும். நம்முடைய ஆத்மாவின் நல்ல கதியைத்தான் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

சுந்—நீ யிவ்வளவெல்லாம் பேசுகிருயே. தற்கொலை செய்துகொள்வது மட்டும் சரியா?

மீரா—சுந்தரி, தற்கொலையிலிரண்டு விதமுண்டு. ஒருவன் தனக்கு நேர்ந்திருக்கும் கஷ்டத்திலுலோ, அல்லது தனக்கு நேரிடப்போகிற அபாயத்துக்குப் பயந்தோ, அல்லதுதான் தற்கொலை செய்துகொள்வதாற்பிறருக்குத் தீங்கு நேரிடுமென்று தெரிந்தோ தற்கொலை செய்து கொள்ளும் பக்ஷத்திலவன் அந்த நிமித்தம் ஸூக்ஷ்ம லோகங்களில் கஷ்டப்படுவதுமன்றி, மறு ஜன்மத்திலு மந்த பாபகிருத்யத்தைச் செய்யும்படியான பிரமேயங்களவனுக்கேற்படுகின்றன. அப்படி யில்லாமலொருவன் ஒரு ராஜ்யத்தையல்லது குடும்பத்தைக் காப்பாற்றவோ அல்லது தான் தற்கொலை செய்துகொள்ளுவதால் ஏதாவதொரு பொது நன்மை நேரிடக்கூடுமென்பதை யுத்தேசித்தோ தற்கொலை செய்துகொண்டால், நம்முடைய கர்மங்களைக் கணக்கெடுத்துக் கர்ம விதியைச் சரிவர நடத்தி வருகிற கர்ம தேவதைகள் அதனுலவனுக்குக் கெடுதலொன்றும் வராமலிருக்கும்படி பார்த்துக் கொள்கிருர்கள். இப்போது நானிறப்பதாலென்ன நலமுண்டாகப் போகிறதோ! வேறென்று மில்லாமற் போனலு மென்பதிக்காவது கவலை நீங்குமல்லவா? எப்போது பகவானிப்படி நடக்கவேண்டுமென்று தீர்மானிக்கிருரோ அப்போதே அதிலேதோ குணமிருக்க வேண்டுமென்று வியக்தமாக வில்லையா? மேலும் நானெந் நிமித்தமாக என்னுயிரை விடப்போகிறதில்லையே. நானிறந்தாலென்பதிக்குத் திருப்தி யுண்டாகும். அவர் மனதைப் புண்படுத்திக்கொண்டிப்புவியில் நானிருப்பானேன்? மேலும் நானிவரை யென்பதியாக அடைந்தது முதலென்தேகமவருடையதாய் விட்டது. ஜன்மாந்தரங்களி லேற்பட்

டிருக்கும் கர்மபந்தத்தால் தானொருபுருஷனுக்கு மொரு ஸ்திரீக்கும் நாயகநாயகீ பாவமுண்டாகிறது. என்தேக மவருக்கடிமைப்பட் டிருப்பதாற்றான் நானவரை பதியா யடையும்படி நேர்ந்திருக்கிறது. ஆகையா லிந்ததேகத்துக் கெனக்கொரு பாத்தியமும் கிடையாது. ஆனாலென்னாத்மா ஸ்வயேச்சையோடு கூடினது. அது பந்தப்பட்ட தல்ல, தன்னிஷ்டப்படி செய்யலாம். ஸஞ்சித, ஆகாம்ய கர்மங்களை மாற்றும் சக்தியதற்குண்டு. பிராரப்தத்தினு லவருக் குடன்பட்டிருக்கு மென்தேகத்தை யவரழிக்க விரும்பினாலதை நானெப்படி மறுக்கலாம்? சுந்தரீ, என்பதி யிப்படியென்னை தேகத்தியாகம் செய்யும்படி கட்டளையிட் டிருப்பது என்னிடத்தில் பகவானுக்கிருக்கும் பிரியத்தை வெளிப்படுத்துகிறது. ஈசன் "ஐயோ, மீரா ரொம்பவும் கஷ்டப்படுகிறாள். இனிமேலிதைப் பொறுக்க மாட்டாள். அவளின்னு முயிரோடிருந்தா லென்னென்ன கஷ்டத்துக் குள்ளாவாளோ" வென்றென்மீது கருணைபுரிந்து என்பதி மனதிற்புகுந் திம்மாதிரி கட்டளையிடச் செய்திருக்கிறான் றோ? எனக்கோ இந்தவாழ்க்கையிற் கொஞ்சம்கூட இச்சை கிடையாது. நான் யாருக்காக உயிருடனிருக்கவேண் டும்? எனக்குக் குழந்தை குட்டிகளொன்றுங் கிடையாது தாய்தந்தையர்களோ இல்வாழ்க்கையைத் துறந்து வனத் தேகிவிட்டார்கள். என்மீது சார்ந்திருந்து நானில்லாமை யாற் கஷ்டப்பட்டப் போகிறவர்கள் வேறு யாரிருக்கிறார்கள். பதியொருவர்தான். எனக் குடன்பிறந்தோர், குழந்தை குட்டிக ளொருவரு மில்லாததாலென் பிரியம் முழுவதையு மவரிடத்திலேயே வைத்திருந்தேன். அவருக்கே நானுயி ருடனிருப்பது சரியல்லவென்று தோன்றினாற் பிறகுயாருக் காக நானிப்புவியி லுயிர் வாழ்ந்திருக்கவேண்டும்?

கிருஷ்ணா, நானுனக்கொரு பெரியகுற்றம் செய்கிறேன், அதை மன்னிக்கவேண்டும். இவ்வுலகிலுள்ள ஜனங்களிற் பெரும்பான்மையோர நானென் கர்ம விசேஷத்தாலிக்

கஷ்டங்களை யெல்லா மநுபவிக்கிறேனென்பதைக் கவனியாமல்நான பக்திசெய்தும் நீயென்னைக் காப்பாற்றவில்லையென்றுதவரு யெண்ணி யுன்னை மதியாதிருப்பார்கள். அதற்குக்காரணமாக விந்தப் பாபியிருக்கிறேனே யென்கிற வருத்தமென்னைப் பாதிக்கிறது. அதற்காக என்னை மன்னித்தருள வேண்டும்.

நானிப்படிக் கஷ்டப்படுவதெல்லா முன் பரீக்ஷையல்லவா? எனக் குன்னிடத்திற் சரியான பக்தியிருக்கிறதா இல்லையா என்று சோதிக்கிருயோ? உன்னைக் குறித்து பக்தி செய்வதாலுண்டாகு மானந்தத்தை யனுபவித்த பிறகெப்படி யொருவர் பக்தி செய்யாமலிருக்க முடியும்? நீயென்னை யெவ்வளவு துன்பத்திற் குள்ளாக்கினுலு மெவ்வளவு பரிசோதனைக்குட் படுத்தினுலுமுன்னை நான் மறப்பேனென்று நினைக்கிருயோ? அதொரு நாளுமில்லை.

சுந்தரீ, இப்போது நானுன்னுடன் பேசுவதுதான் கடைசிமுறை. நான் போகிறதைப் பற்றி யதிக வருத்தப்படாதே. உன் தேக சௌக்கியத்தைக் குறித்துக் கவனமாயிரு. நானிறந்த பிறகு நீதான் மஹாராஜாவுக்குத் தேறுதல் சொல்லவேண்டும். நான் போகிறேன். திரும்பவுமெந்த ஜன்மத்தில் நாம் சந்திக்கப் போகிருேமோ?

சுந்.—ஐயோ, மீரா, நீ யிப்படிச் செய்வது ஞாயமா? எங்களை யெல்லா மிப்படி நீ விட்டுச் செல்லலாமா?

மீரா.—சுந்தரீ, இப்படி யொன்றும் சொல்லாதே. என்னுல் தாங்கமுடியாது. அவரவர்களுடைய விதிப்படித்தானவரவர்களுக்கு நடக்கும். இனிக்கால தாமதம் செய்யலாகாது. அருகிலிருக்கும் யமுனையில் விழுந்தென்பதி வார்த்தையை நிறைவேற்றப் போகிறேன்.

(போகிருள்.)

சுந்.—இதென்ன வாச்சரியம்! எதற்குச் சம்மதித்தாளு யிந்தக் கடிதத்திற் கிணங்கமாட்டாளென்றல்லவோ நினைத்தேன். ஒரு குற்றமு மறியாதிருக்கத் தன் பதியின் கட்டளையை நிறைவேற்றும்பொருட்டு யாராவது தற்கொலை செய்துகொள்வார்களா? என்னவோ எனக்குச் சந்தேகமாகத் தானிருக்கிறது. இவளுண்மையாகவே தன்னை மாய்த்துக்கொள்ளப் போகிறாளா? இப்பவோ நல்ல இருட்டாயிருக்கிறது. அவளுக்குத்தெரியாம லவளைப்பின்தொடர்ந்து சென்று அவளென்ன செய்கிறாளென்பதை யறிகிறேன்.

(போகிறாள்.)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், யம். ஏ.

அந்தணர் ஒழுக்கம்.

அந்தண ராவோ ரறுதொழிற் பூண்டுளோர
செந்தழ லோம்பிமுப் போது நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றுக்கிட்டுச்
சந்தியு மோதிச் சடங்கறு*ப் போர்களே—224

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப் †
‡ போதாந்த மான பிரணவத் துட்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த ‡ நாதனை
யீதாமெ * ஞ்றுகண் டின்புறு வோர்களே—225 திருமந்திரம்.

---

* கர்மக்கிரியைகளை நிறைவேற்றுவோர்கள்.

† தத்வமஸி வாக்கியம்; அல்லது அகார உகார மகாரம்.

‡ முடிந்த ஞானம்.

* இதுவென்று சுட்டியறிதலின்றி.

கீதா வாக்யங்கள்.

(5) அகர்மம்.

𑌨 𑌹𑌿 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌷𑌣𑌮𑌪𑌿 𑌜𑌾𑌤𑍁 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑌕𑌰𑍍𑌮𑌕𑍃𑌤𑍍 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌵𑌶𑌃 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌰𑍍𑌵𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌜𑍈𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ॥

ஒன்றும் செய்யாமல் ஒருவனும் ஒருக்ஷணங்கூட இருக்க முடியாது. ஒவ்வொருவனும் ப்ரக்ருதி விதிக்குட்பட்டு தன் ஆதீனமில்லாமல் ஏதாவது செய்துகொண்டேயிருக்கிறுன்.

[—பகவத்கீதை ௩. 5]

கர்மம்:—பகவத் கீதையில் இச்சொல் ஸமயோசிதமாய் நான்கு பொருள்பட உபயோகப்பட்டிருக்கின்றது.

1. கர்மம்=செய்கை (Action) அதாவது தனது எண்ணம் அல்லது சங்கல்பம் (Volition) இன்றியே யந்திரம்போல் செய்யும் செய்கைக்கும் கர்மம் என்று பெயர். மனிதன் தூக்கத்தில் தன்னினைவில்லாமலே கொசுக்கடிகளையகற்ற கையசைப்பதும், ஜலம் பள்ளத்தை நோக்கி செல்வதும், யந்திரம் சுழல்வதும் இக்கர்மமேயாகும். இதில் மனம் என்னும் தத்துவமே சேரமாட்டாது.

2. கர்மம்=ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமி என்று மூன்று வகைக் கர்மம் வேதாந்த ரீதியைச் சார்ந்தது. அதாவது நாம்செய்த செய்கையின் பலனை நாமே இப்பிறவி தப்பினும் எப் பிறவியிலாவது அனுபவித்தே தீரவேண்டும் என்பதேயாம். இதில் கர்த்தா புத்தி பூர்வமாய்த் தான் செய்வதின்னதென்றறிந்தே ஸ்வாதீனமாய்ச் செய்கின்றுன். பிறர் நிர்ப்பந்தம் யாதொன்றுமில்லை. அப்படிப் பிறர் வருத்திக்குட்பட்டுத் தன் ஆதீனமற்றுச் செய்ய நேரிடின் அக்கர்மத்துக்கு அவன் பாத்தியஸ்தனல்ல.

3. கர்மம்=வேதகர்மம் அதாவது வேதம் முதலான நமது பூர்வ நூல்களில் நாம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டவைகளை நாம் செய்தே தீரவேண்டும்.

அவைகள் நித்யகர்மங்கள் என்றும் நைமித்திககர்மங்கள் என்றும் இரு வகைப்படும். நித்ய கர்மங்களை ஒருவன் எப்படியாவது செய்தே தீரவேண்டும். அதினால் பலனடைவதென்பதில்லை. செய்யாவிட்டால் மாத்திரம் பாபம் ஸம்பவிக்கும்.

𑌅𑌹𑌰𑌹𑌃 𑌸𑌂𑌧𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍀𑌤

பிராமணன் தினந்தோறும் ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டுமென்பது நித்யவிதி. செய்வதால் பயனில்லையாயினும், செய்யாவிடில் பாபம் ஸம்பவிக்கும். நைமித்திக கர்மமென்பது ஒரு நிமித்தம் அல்லது காரணம் அல்லது பலனைக்கோரிச் செய்வதே.

𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑍇𑌨𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌕𑌾𑌮𑍋𑌯𑌜𑍇𑌤

"ஸ்வர்க்கம் புக விரும்புவோன் ஜோதிஷ்டோமம் செய்யவேண்டும்.

இதில் ஸ்வர்க்கபிராப்தி பலனாகும். எனக்கு ஸ்வர்க்கம் வேண்டாம் என்று ஒருவன் சொல்லுவானாகில் ஜோதிஷ்டோமமும் செய்யவேண்டாம் என்று சொல்லிவிடலாம்.

4. கர்மம்=கடமை

இதுவரை சொன்னது ஆத்மார்த்தமானது. இப்பொழுது சொல்லும் நான்காவது பொருள் பரார்த்தம் (Altruistic) அல்லது ஸர்வார்த்தமானது. ஓர் ஜன ஸமூகமானது நன்கு நிலைத்துச் செழித்தோங்குவதற்கு அவ்வினத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் தன் தன் கடமையைச் செய்யவேண்டும். அன்றேல் அஜ்ஜனக்கட்டு சீர் குலைந்து கடைசியில் நாசமாய் விடும். ஒவ்வொருவனும் பிறக்கும் பொழுது சில உரிமைகளுடனும் கடமைகளுடனும் பிறக்கிறான்.

(தொடரும்.)

ஆர். எஸ் நாராயணஸ்வாமி அய்யர்,
பி. ஏ., பி. எல்.

தற்கால நிலைமை.

(330-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. ஹிந்து ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ பி. ஏ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் உபசரணை சபையாருக்கு அக்கிராசனபதியாயிருந்து நல்வரவு கூறினர். மதுரை, திருச்சிறுப்பள்ளி, நாகர்கோவில். குண்டூர், மதனப்பள்ளி முதலிய இடங்களிலிருந்தும் மதராஸிலிருந்தும் 220 காலேஜ் மாணுக்கர்கள் பிரதிநிதிகளாய் வந்திருந்தார்கள். சென்னை காலேஜ் உபாத்தியாயர்கள் அநேகர் சபையை அலங்கரித்து வீற்றிருந்தார்கள். உபந்யாச மண்டபத்தில் மத்தியில் நமது மாட்சிமை பொருந்திய மகாராஜா ஜார்ஜு சக்ரவர்த்தியவர்கள் படம் தொங்கவிடப்பட்டிருந்தது.

*
* *

ஒரு பக்கத்தில் ஸ்ரீகோகலே படமும் மற்றொரு பக்கத்தில் ஸ்ரீபெஸண்டம்மை படமும் தொங்கவிடப் பட்டிருந்தன. ஸர், சுப்பிரமணிய ஐயரவர்கள் வெகு அழகான உபந்யாசம் செய்தார்கள். மாணுக்கர்களுக்கும் உபாத்திமாருக்கும் புத்திமதி கூறினர்கள். கன்வென்ஷன் அங்கத்தினர்கள் 'வாலண்டியர்களாக' அதாவது சம்பளமில்லாத ஸ்வேச்சா ஸேவகர்களாய்ச் சேர்ந்து தங்களால் கூடிய ஜனசமூக கைங்கரியங்களைச் செய்ய பழகவேண்டுமென்றும், தீண்டாச் சாதியாருடைய பிரயோஜனத்துக்காக இராப்பள்ளிக்கூடங்கள் நடத்தவேண்டுமென்றும், கிராமாந்தரங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குத் தெரியவேண்டிய சில விஷயங்களைப் போதிக்கவும், அவர்களுடைய ஸ்திதிமதி, வரவு செலவுகளைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், ஏழைகளுக்கு சம்பளம் கொடுப்பதற்காக உதவி சபைகள் ஏற்படுத்தவேண்டுமென்றும், தீர்மானித்தார்கள். மாணுக்கர்களுக்கு சரீர சிக்ஷை செய்வது சரியல்லவென்றும், இந்திய சரித்திரத்தைக் கற்பிப்பதில் இந்தியாவினிடத்தில் பக்தியுண்டாகுமாறு கற்பிப்பதவசியம் என்றும்,

பாலிய விவாகத்தை விலக்கவேண்டுமென்றும், வரசுல்கம் பெறுதல் கூடாதென்றும், மதப்பயிற்சி யவசியம் என்றும், தீர்மானங்கள் நிகழ்ந்தன. சில வருஷங்களுக்குமுன் இம்மாதிரியான கூட்டம் கூடுமென்று ஒருவரும் கனவிலும் நினைக்கவில்லை. இதுவும் தற்காலத்திய கிளர்ச்சியின் பலனாகும்.

*
* *

மேற் கூறியவாறு தேசமெங்கும் ஒற்றுமை பரந்து விளங்க சென்னையில் ராவ் பஹதூர் தியாகராஜ செட்டியாரவர்கள் பிராமணர்க ளல்லாதவர்கள் எல்லோரும் ஒருங்கு சேரவேண்டு மென்றும், காங்கிரஸ்ஸில் இந்தியாவுக்கு ஸ்வாராஜ்யம் வேண்டுமென்று கேட்பது சரியல்லவென்றும் ஒரு விரிவான நிருபம் வெளியிட்டு சென்னையில் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் பிரதி கால் அணுவாக விற்கும்படி செய்திருக்கிறாராம். "பிராமணர்கள் சங்கையில் குறைந்தவர்கள், பிராமணரல்லாதவர்கள் மிகவும் அதிகமானவர்கள். பிராமணர்கள் கல்வியில் மிகுந்தவர்களாயும் ஆகையால் சர்க்கார் உத்யோகங்களையும் இதர உத்யோகங்களையும் பெரும்பான்மையும் உடையவர்களா யிருக்கிறார்கள். பிராமணரல்லாதவர்கள் பணத்திலும், செல்வாக்கிலும் குறைந்தவர்களல்லர். ஆயினும் தங்களுக்கு உத்தியோகங்கள் கிடைக்காததால் பிராமணரல்லாதவர்களுக்கு மனதில் சஞ்சலமுண்டா யிருக்கிறது. ஆகையால் அவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய ஸ்திதியை முன்னுக்கு கொண்டுவரவேண்டிய தவசியம். பிராமணர்களல்லாதவர்களுடைய அதிருப்தியைப் பற்றி கவர்ண்மெண்டாருக்குத் தெரிவிக்கப்படும்." என்றும் அந்தப் பத்திரிகையில் கண்டிருக்கிறது. பிராமணரல்லாதவர் என்று ஒரு ஜாதியுண்டா? அப்படியே செட்டியல்லாதவர், க்ஷத்திரியனல்லாதவர், என்ற சமூகமுண்டா? இந்த நிருபத்தைப் பார்த்தால் பிராமணர்களை வெறுத்து, மாத்ஸர்யத்தால் எழுதப்பட்டதாய்த் தோன்றுகின்றதே யொழிய வேறில்லை. மகம்மதியர்களும் ஹிந்துக்களும் ஒன்றுசேரும் இந்நாளில் ஹிந்துக்கள் தங்களுக்குள் பிராமணர்களை வெறுப்பது மிகவும்வியசனகர

மானது. வைசியர்களும், கம்மவார்களும், பலிஜ நாயக்கமாரும், மற்ற சில ஜாதியார்களும் தங்கள் தங்கள் ஜாதிச் சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கவும் அவர்களை முன்னுக்கு கொண்டுவரவும் சங்கங்கள் ஏற்படுத்தி முயன்றுவருகிறார்கள். இக்காரியங்கள் மிகவும் மெச்சத் தக்கவைகள். ஒவ்வொரு பாகமும் மேன்மையடைந்தால் தான், முழுமையும் மேன்மையடையும். ஒவ்வொரு பிராமணனும் இத்தகைய முயற்சிகளை பலிதமாகும்படி கூடிய உதவி செய்யவேண்டும். ஆனால் பிராமணனல்லாத கூட்டமென்று ஒன்று உண்டா? பிராமணனல்லாதவன் என்ற குணம் ஒன்று உண்டா? இவர்கள் எல்லோருக்கும் பொதுவான குணம் என்ன? பிராமணர்கள் படித்து உத்யோகம் பெற்றால் அதுவும் குற்றமா? மற்றவர்களைப் படிப்பிக்க அவர்கள் உதவ வில்லையா? இன்னும் வேண்டிய உதவி செய்யத் தயாராக வில்லையா?

*
* *

மதராசிலும், பம்பாயிலும், லாகூரிலும் இன்னும் மற்ற இடங்களிலும் உள்ள பத்திரிகைகளிலும் இம்முயற்சியை இகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலும் பிராமணரல்லாத பலர் தாங்கள் இந்த முயற்சியை ஆமோதிக்கவில்லையென்று பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். வெறுப்பேக காரணமாயுள்ள ஒரு முயற்சியும் நிலைக்க முடியாது. அன்புதான் கிரஹண சக்தி. அன்பினால் இயக்கப் பட்டமுயற்சிதான் நிலைக்கும். இவ்வுண்மையை யறிந்து இம்முயற்சியை துவக்கினவர்களும், தேச க்ஷேமத்துக்கு காரணமான அன்பைக் கைக்கொண்டு ஒழுகுவாராக.

*
* *

ஜகத் பிரசித்தி பெற்ற ஜகதீச சந்திரபோஸின் ஆராய்ச்சி சாலையை மாட்சிமை தங்கிய ராஜப்பிரதிநிதியவர்கள் போய் பார்த்தார்களாம். ஒரு பெரிய விருக்ஷத்துக்கு ஒரு திராவகத்தை பிரயோகித்து அதை மயக்கமுறச் செய்து, வேருடன் அதைப் பெயர்த்து வேறு இடத்தில் நட்டுவிட்டாராம். இம்மருந்து பிரயோகித்ததால் மாமா

னது வேருடன் பிடுங்கும் அதிர்ச்சியை உணராது இருந்த தால் பிற்பாடு முன்போல நன்றாக வளர்ந்ததாம். இது ராஜப்பிரதிநிதிக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைவித்ததாம். 1 செகண்டில் ஒரு செடி எவ்வளவு வளருகிறதோ அதைக் கண்ணுக்குக் காட்டக்கூடிய ஒரு கருவியையும் புதிதாக உண்டுபண்ணியிருக்கிறாராம். அது 10,000 முதல் 10 லக்ஷம் மடங்கு வரை அதிகரிக்கும் சக்தியுள்ளதாகையால் இவ்வளவு நுண்ணிய வளர்ச்சியையும் காட்டவல்லதாம். தரையில் ஊரும் நத்தாங்கூட்டின் வேகத்தை, துப்பாக்கியினின்று விடுபட்ட குண்டின் வேகத்தைப்போல் காட்டக்கூடிய அவ்வளவு அதிகரிக்கும் சக்தியுடையதாம் அக்கருவி. இதையுங்கண்டு ராஜப்பிரதிநிதிவியப்படைந்தாராம்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

பத்திரிகை வரவு.

விவேக போதினி நூறும் சஞ்சிகை கனஸ்ரீ ஹைகோர்ட்டு ஜட்ஜு சேஷகிரி ஐயர் அவர்கள் முன்னுரையுடனும் பல சித்திரப் படங்களுடனும் வெளிவந்திருக்கின்றது. இந்த சஞ்சிகையில் ஒவ்வொரு விஷயத்திலும் மிகத்தேர்ச்சி பெற்ற பண்டிதர்கள் அவர் அவர்கள் விஷயங்களில் அரிய வியாசங்கள் எழுதியுள்ளார். இதில் வந்துள்ள 32 வகை விஷயங்களில் ஒவ்வொரு ஸ்திரீபுமான் குழந்தைகளும் தங்கள் தங்களுக்கு இனியதாகிய விஷயங்களைக் காணுகிறார். இந்த மாதாந்தர பத்திரிகை மேன்மேலும் சிறப்படைந்து வருவதைக் கண்டு மகிழ்கிறோம்.

பக்தியின் மகிமை:—திருமியச்சூர் பிரஹ்மக்ஞானசங்கத்தைச் சேர்ந்த ஆர். ரத்தினஸபாபதி முதலியாரவர்களால் பிரசுரிக்கப் பெற்றுவரும் "சாந்தி வசனம்" என்னும் கிரந்தமாலையின் மூன்றாவது பகுதியாக இது வெளிவந்துளது. மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மையவர்களால் இயற்றப்பெற்ற ஆங்கில வாசகத்திற்கு இது தமிழ்மொழி பெயர்ப்பாகும். அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்

பெற்ற அநேகமான இத்தகைய சிறு புத்தகங்களையெல்லாம் முற்றும் தமிழிற் கொண்டுவந்து தமிழுலகமும் பயன்பெற வேண்டுமாறு செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டுழைக்கும் இவரது முயற்சியைத் தமிழபிமானி ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டுகிறோம். பேஸண்ட் என்று சொன்னால், தன்னை மறந்த ஓர் ஊக்கத்தோடு எவரும் சற்று காது கொடுத்துக் கேட்கும் இக்காலத்தில், இத்தகைய மொழிபெயர்ப்புகளை வாங்கிப் படிக்கவேண்டுமென்று யாம் கூறுமலே எவரும் உணர்வார். இதன் விலை அணு 2 தான். வேண்டுவோர் "தஞ்சாவூர் ஜில்லா பேரளம் போஸ்டு திருமியச்சூர் சாந்திஆசிரமம் காரியதரிசிக்கு" எழுதக்கோருகிறோம்.

சமாசாரம்.

சென்ற 1916ஆ அக்டோபர்மீ 5, 6 தேதிகளில் ஆலப்பிழையில் கேரள பிரஹ்மஞான பெடரேஷன் நடைபெற்றது. திருவாங்கூர் ஹைகோர்ட்டு சர்க்கார் வைக்கீல் பிரஹ்மஸ்ரீ ஆனந்தராயரவர்கள் அக்கிராசனம் வஹிக்க இணங்கியிருந்தார்கள். உள்ளூர் உபசரணை சபைக்கு நாயகரான பிரஹ்மஸ்ரீ கிருஷ்ணய்யங்கார் அவர்கள் வெளியூரிலிருந்து வந்த சகல சகோதரர்களுக்கும் நல்வரவு கூறினர். பிரஹ்மஸ்ரீ ஆனந்தராயரவர்கள் வரும் படகுக்கு இடையூறு நேரிட்டதால் அவர்கள் 1வ சாயங்காலத்தில் தான் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வருமுன்னரே சில உபந்யாசங்கள் நடைபெற்றன. பிரஹ்மஸ்ரீ பி. ஆர். சுந்தரராஜ ஐயர் அவர்கள் வெகு விமர்சையாயும் பரிஷ்காரமாயும் லோககுருவின் வருகையைப்பற்றி இனிய தமிழில் உபந்யசித்தார்கள். ஆலப்பிழை ஸநாதன தர்மவித்யாசாலை உபாத்தியாயர்களில் ஒருவரான பிரஹ்மஸ்ரீ எஸ். ராமஸ்வாமி ஐயர் அவர்கள் பி. ஏ. பி. எல். 'பிரஹ்மஞானமும் கல்வியும்' என்ற விஷயத்தைப் பற்றியும், மகா-ா-ா-ஸ்ரீ பி. கோபால மேனோன் அவர்கள் "கீதையும் கிருஸ்தவர் விவிலிய நூலும்" என்ற விஷயத்தைப் பற்றியும், மகா-ா-ா-ஸ்ரீ சி. பரமேசுவர மேனோன் அவர்கள் பி. ஏ. "கைக்கரிய"த்தைப் பற்றியும் இனிது பிரசங்கித்தார்கள். மறுநாள் பிரஹ்மஸ்ரீ ஸ்ரீநிவாசய்யர் அவர்கள் எம். ஏ. 'மஹாத்மாக்களை'ப் பற்றியும், பிரஹ்மஸ்ரீ சுந்தரராஜய்யர் அவர்கள் "பிரஹ்மஞான

சபை"யைப் பற்றியும், மகா-ா-ா-ஸ்ரீ கருணாகர நாயர் அவர்கள் கேரளத்தில் பிரஹ்மஞான சபையின் அபிவிருத்தியைப் பற்றியும், 'கிருஸ்தவர் மதத்தில் புனர் ஜன்மம் உண்டா' என்பதைப் பற்றி மகா-ா-ா-ஸ்ரீ எஸ். பி. சாமுவேல் அவர்களும் "பழமையும் புதுமையும்" என்ற விஷயத்தைப் பற்றி பிரஹ்மஸ்ரீ ராமகிருஷ்ணய்யர் அவர்களும் பிரசங்கித்தார்கள். மகா-ா-ா-ஸ்ரீ பி. நாராயணமேனோன் அவர்கள் பி. ஏ. பி. எல். "கேரளத்தின் கற்பனை" யைப் பற்றி ஆங்கிலத்தில் விவரமாய் பிரசங்கித்தார்கள். காரியாலோசனை கூட்டங்கள் இரண்டு நடந்தன. கேரளத்தை இருபாகமாகப் பிரித்து திருவாங்கூரை ஒரு பாகமாகவும், கொச்சி, மலையாளம், மங்களூர் இவைகளை ஒரு பாகமாகவும் பிரித்து ஒவ்வொரு பாகத்துக்கும் அடிக்கடி ஜில்லா கான்பரென்சுகள் நடத்துகிறதென்றும் வருஷந்தோறும் நவராத்திரி காலத்தில் ஆலப்பிழையில் இரு பாகத்தாரும் பெடரேஷனாக கூடவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது,

---

ஆலப்பிழை ஸநாதந வித்யாசாலையின் வனப்பும் விஸ்தாரமும், மாணாக்கர்களுடையவும், உபாத்தியாயர்களுடையவும், உற்சாகமும், விநீதியும், அலர்ந்தமுகமும், ஆலப்பிழையில் பெடரேஷன் கூட்டுவதை ஒரு உற்சாகமுள்ள கைங்கரியமாகச் செய்கின்றது:

அந்த வித்யாசாலையில் பயிலும் மாணாக்கர்களை சங்கீதத்திலும் சாதாரணமாக பழக்கியிருக்கிறார்கள். பிரஹ்மஸ்ரீ ஆர். ஸ்ரீநிவாசய்யர் அவர்கள் ஹரிகதையில் சங்கீதரசத்தையும் பிரஹ்மஞான தத்துவங்களையும் புகட்டி சபையோர்களை ஆனந்தவசப்படுத்தினார்கள். ஒரு தமிழ் நாடகமும் ஒரு ஆங்கில நாடகமும் மாணாக்கர்களால் நடத்தப்பட்டது. வாலிபர்கள் மிகவும் நன்றாக நடித்தார்கள்.

எவ்விதத்திலும் வெகு அழகாயும் திருப்திகரமாயும் பெடரேஷன் நடைபெற்றது.

நவம்பர்மீ 17உ நெய்யாற்றின் கரை, அச்வத்தாமா லாட்ஜில் பிரஹ்மக்ஞான சபையின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. ஸகோ. ரா. ஸ்ரீநிவாஸன் அக்ராசனம் வகித்தனர். ஸகோ. நெ. ப. பரமேசுவரய்யர் 'பிரஹ்மக்ஞான சபை'யென்பதைக் குறித்து உபந்யாசம் செய்தார். நவம்பர்மீ 18உ மேற்கூறியலாட்ஜின் ஆதீனத்தில்

சகோ. ரா. ஸ்ரீநிவாஸன் 'பிரஹ்ம வித்யை' என்னும் விஷயத்தைக் குறித்தும், 'சமீப காலத்தில் ஜகத்குருவின் வரவு' என்னும் விஷயத்தைக் குறித்தும் உபந்யாசங்கள் செய்தார். அக்காரணம் பற்றி சிலர் 'உதயதிசை நக்ஷத்திர ஸங்கத்'தின் மெம்பர்களானூர்கள்.

மதுரை பிரஹ்மஞானசபை அங்கத்தினராகிய சகோ. கே. யஸ் ராமசந்திரய்யர், இப்பொழுது புதுக்கோட்டையிலாகா ஆலங்குடியிலிருக்கிறூர். புதுக்கோட்டை சமஸ்தான பள்ளிகளில் மதப் பயிற்சி கொடுக்கும்படி யேற்பாடு செய்யவேண்டுமென்று மேற்படி தர்பாருக்கு மனுப் போட்டார். தர்பார் அவர்களும் தயவு கூர்ந்து மதப் பயிற்சி தருதற்கேற்ற புத்தகங்களைத் தயார் செய்தற்கும், மத போதனை கொடுக்கும் விஷயத்தில் ஆலோசனையைத் தெரிவிக்கவும் ஐந்து கனவான்கள் உள்ள கமிட்டி ஏற்படுத்தி யிருக்கிறூர்கள். சமஸ்தான கல்வியிலாகா பண்டிதர்களும் உத்தியோகஸ்தர்களும் 4 பேர்கள் கே. எஸ். ராமசந்திரய்யர் அவர்கள் 1 ஆக 5பேர்கள் இக் கமிட்டியில் இருக்கிறூர்கள் என்று அறிய சந்தோஷப்படுகிறோம். இவ்வைந்து கனவான்களும், குறிப்பிட்ட ஆறு மாதங்களுக்குள் புத்தகங்களை தயார் செய்து தர்பார் அவர்கள் கொண்ட அபிப்பிராயத்தை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

சகோ. கே. எஸ். ராமசந்திரய்யரவர்கள் பிரேரபணையின் பேரில் ராமனுதபுரம் ஜில்லா தாலூகா போர்டைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களில் ஹிந்துப் பையன்களுக்கு "ஹிந்து மதப்பிரச்ன உத்தர"ப் புத்தகங்களைக் கற்பித்து வரும்படி மேற்கண்ட தாலூகா போர்டார் உத்தரவு செய்திருக்கிறூர்கள் என்றறியச் சந்தோஷிக்கிறோம். பிற தாலூகா போர்டார்களும் இங்ஙனமே செய்வாராக.

சர்வதேள் விஷ சஞ்சீவி.

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி,நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும, நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி,நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால்,அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ அ பை
விலை பாக்கெட் 1-க்கு ரூ	0—8—0
டசன் 1-க்கு ரூ	5—0—0

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

இந்தியாவில் மிகப்பெரிதும்
பழமையுமான வைத்தியசாலை எது?
1881-ஹுல் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும். சஞ்சீவி பாலமித்ர. 300மாத்ரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1. வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிறோம். கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

இந்த ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள். முதன்மையான மருந்து சென்ற35-ஹுல் காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள் 32; மாத்ரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்கநிக்ரஹஔஷதாலயம் 77. மேலகோபுரம் மதுரை.

இருமல், கபம். காசம் இவைகளுக்குச்சிறந்தமருந்து. காசாந்தக மாத்ரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1. இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள்விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனாமாய் அனுப்புகிறோம்.